

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# நீ வெற்றியடைவதை உன்னை தவிர, வேறு யாராலும் தடுக்க முடியாது!!

Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone : 8939144344,8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor,West Wing,Gokul Arcarde,
No.2,Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்





| | |
|---|---|
| 04 - 11 | தமிழக நிகழ்வுகள் |
| 11 - 37 | தேசிய நிகழ்வுகள் |
| 37 - 49 | உலக நிகழ்வுகள் |
| 49 - 55 | விருதுகள் |
| 55 - 61 | நியமனங்கள் |
| 61 - 65 | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் |
| 65 - 71 | விளையாட்டு நிகழ்வுகள் |
| 71 - 73 | வர்த்தக நிகழ்வுகள் |
| 73 - 76 | முக்கிய தினங்கள் |
| 76 - 77 | புத்தகங்கள் |









# தமிழக நிகழ்வுகள்

1. சென்னையில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் சிறந்த அணிவகுப்பிற்கான முதல் பரிசை பெற்ற துறை எது?

**விடை:** தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம்

**விளக்கம்:**

1. சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் ''சிறந்த அணிவகுப்பில்'' தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமானது முதல் பரிசினை வென்றுள்ளது.
2. வேளாண் மற்றும் தோட்டக்கலை துறையானது 2வது பரிசினையும் சுகாதாரத்துறை 3வது பரிசினையும் பெற்றுள்ளது.

2. 2ம் உலக கொங்கு தமிழர் மாநாடு எங்கு நடைபெறவுள்ளது?

**விடை:** நாமக்கல்

**விளக்கம்:**

1. 2வது உலக கொங்கு தமிழர் மாநாடு இன்று நாமக்கல்லில் நடைபெறவுள்ளது.

3. ICT Academy bridge – 2019-ன் கருப்பொருள் என்ன?

**விடை:** Fostering India Industry 4.0

**விளக்கம்:**

1. ஐ.சி.டி அகாடெமி பிரிட்ஜ் 2019 என்ற மாநாட்டை தமிழ்நாட்டின் தகவல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் டாக்டர். மணிகண்டன் தொடங்கி வைத்தார்.
2. இம்மாநாட்டின் 37வது பதிப்பின் கருப்பொருள் - "Fostering India Industry 4.0" என்பதாகும்.

4. தமிழக அரசின், 30வது சாலை பாதுகாப்பு வார விழாவின் மையக் கருத்து என்ன?

**விடை:** சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு

**விளக்கம்:**

1. சாலை பாதுகாப்பு வார விழா (2019), பிப்ரவரி 04–10 (Road Safety week 2019 4 to 10 February 2019)

2. பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தமிழக அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் "சாலை பாதுகாப்பு வாரம்" கடைபிடிக்கப்படுகிறது.
3. 2019ம் ஆண்டு, 30வது சாலை பாதுகாப்பு வார விழா 04.02.2019 முதல் 10.02.2019 வரை "சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு" என்ற கருப்பொருளை மையப்படுத்தி கடைபிடிக்கப்படுகிறது.

5. எந்த இரு வங்கிகள் இணைந்து "தமிழ்நாடு கிராம வங்கி" உருவாக்கப்பட்டுள்ளது? அதன் தலைமையகம் எங்கு உள்ளது?

**விடை:** பல்லவன் மற்றும் பாண்டியன், சேலம்

**விளக்கம்:**

1. தமிழ்நாட்டில் செயல்படும் பல்லவன் - பாண்டியன் கிராம வங்கிகள் இணைக்கப்பட்டு, "தமிழ்நாடு கிராம வங்கி" என்ற பெயரில் புதிய வங்கி உருவாக்கப்பட்டுள்ளது.
2. இந்தியன் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ், இந்தியன் வங்கியின் சார்பு வங்கியாக இயங்க உள்ளது.
3. தலைமையகம் சேலத்தில் உள்ளது.

6. 102 – தாய் - சேய் நல வாகன திட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

**விடை:** 2013

**விளக்கம்:**

1. தமிழகத்தில் அனைத்து அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்கள் மற்றும் சேய்களை அவர்களது இல்லத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்வதற்கான "102 – தாய் - சேய் நல வாகன சேவை" திட்டத்தின் கீழ் 15 புதிய வாகன சேவை தொடங்கப்பட்டுள்ளது.
2. 102 – தாய் - சேய் நல வாகன திட்டம் 2013ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

7. தமிழக அரசின், பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருதைப் பெற்றவர் யார்?

**விடை:** ரக்சனா

**விளக்கம்:**

1. பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காக பணியாற்றியோர்க்கு தமிழக அரசால் வழங்கப்படும் பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருதானது கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரக்சனா என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
2. தேசிய பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 24

8. திருடப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை கண்டறிவதற்காக சென்னை காவல்துறை அறிமுகப்படுத்திய செயலி எது?

**விடை:** "DIGICOP"

**விளக்கம்:**

1. திருடப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை கண்டறிவதற்காக "DIGICOP" என்ற மொபைல் செயலியை சென்னை பெருநகர காவல்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.
2. காவல் ஆணையர் ஏ.கே. விஸ்வநாதன் இச்செயலியை தொடங்கி வைத்தார்.

9. பிரதான் மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா) எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

**விடை:** 2016

**விளக்கம்:**

1. பிரதான் மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 2016 – 17 ஆண்டில் அதிக காப்பீட்டுத் தொகை பெற்றதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
2. பிரதான் மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் ஏப்ரல் 2016ல் தொடங்கப்பட்டது
3. இத்திட்டத்தின் கீழ் காரிப் பயிர்களுக்கு – 2 சதவிகிதமும், ராபி பயிர்களுக்கு 1.5 சதவிகிதமும் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

10. தமிழக அரசின் உழவன் செயலியில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தொடங்கப்பட்ட புதிய சேவையின் பெயர் என்ன?

**விடை:** JFarm

**விளக்கம்:**

1. உழவன் செயலியில் நியாயமான விலையில் விவசாய உபகரணங்களை விவசாயிகள் பெறுவதற்காக "JFarm" என்ற புதிய சேவையை தமிழக அரசு தொடங்கியுள்ளது.
2. JFarm சேவைகள் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நவீன விவசாய உபகரணங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரிக்க முடியும்.

11. சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ள, டி.எம்.எஸ் முதல் வண்ணாரப் பேட்டை வரையிலான மெட்ரோ இரயில் சேவையின் தொலைவு என்ன?

**விடை:** 10.01 கி.மீ.

**விளக்கம்:**

1. சென்னை மெட்ரோவின் நீள வழித்தடத்தில், டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான 10.01 கி.மீ தூரத்திற்கு மெட்ரோ இரயில் சேவையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிப்ரவரி 10 அன்று தொடங்கி வைத்தார்.
2. இதன் மூலம் சென்னை மெட்ரோ-வின் முதற்கட்ட மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் நிறைவு பெற்றுள்ளது.

12. சரக்கு மற்றும் சேவைகள் வரி வசூலித்தலில் தமிழ்நாடு எந்த இடத்தில் உள்ளது?

**விடை:** 4

**விளக்கம்:**

1. நாட்டில் ஒட்டுமொத்தமாக சரக்கு மற்றும் சேவை வரி வசூலித்தலில் தமிழ்நாடு 4வது இடத்தைப் பிடித்துள்ளது.
2. ஒட்டு மொத்தமாக ரூபாய் 70.792 கோடிகள் வரி வசூலித்து மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த இடத்தில் உத்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

13. தமிழகத்தின் தலைமைத் தேர்தல் ஆணையர் யார்?

**விடை:** மாலிக் பெரோஷ்கான்

**விளக்கம்:**

1. தமிழகத்தின் கூடுதல் தேர்தல் அதிகாரியாக எம்.பாலாஜி மற்றும் வி.ராஜாராமன் நியமிக்கப்பட்டுள்ளனர்.



We Shine Academy ™

2. தமிழகத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி “சத்ய பிரத சாகு” (MP மற்றும் MLA தேர்தலை நடத்துகிறார்).
3. தமிழகத்தின் தலைமைத் தேர்தல் ஆணையர் மாலிக் பெரோஷ்கான் (உள்ளாட்சி தேர்தலை நடத்துகிறார்).

14 தமிழகத்தில் தற்போது உள்ள மாநகராட்சிகளின் எண்ணிக்கை?

**விடை:** 14

**விளக்கம்:**

1. நாகர்கோவில், ஓசூர் ஆகிய நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
2. ஏற்கனவே தமிழ்நாட்டில் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், தூத்துக்குடி, நெல்லை, திண்டுக்கல், தஞ்சாவூர், திருப்பூர், ஈரோடு, வேலூர் என மொத்தம் 12 மாநகராட்சிகள் உள்ளன. தற்போது ஓசூர், நாகர்கோவில் சேர்த்து மொத்த மாநகராட்சிகளின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

15. 18வது தமிழ் இணைய மாநாட்டின் கருத்துரு என்ன?

**விடை:** தானியங்கி கருவிகளில் தமிழ்மொழிப் பயன்பாடு

**விளக்கம்:**

1. பதினெட்டாவது தமிழ் இணைய மாநாடு – 2019 (Tamil Internet Conference – 2019) சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் வரும் செப்டம்பர் 20 முதல் 22ம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ளது. உத்தமம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம், இணைந்து நடத்தும் இந்த மாநாடு ‘‘தானியங்கி கருவிகளில் தமிழ்மொழிப் பயன்பாடு’’ என்ற கருத்துருவுடன் நடைபெறவுள்ளது.

16. சர்வதேச அளவிலான நவீன கால்நடைப் பூங்காவானது, தமிழகத்தில் எங்கு அமையவுள்ளது?

**விடை:** தலைவாசல் (சேலம்)

**விளக்கம்:**

1. தமிழகத்தில், சர்வதேச அளவிலான நவீன கால்நடைப் பூங்காவானது, சேலம் மாவட்டம் தலைவாசலில் 900 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 396 கோடி செலவில் அமையவுள்ளது.

2. இப்பூங்காவானது, நாட்டு இன கால்நடைகளின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் அமைக்கப்படவுள்ளது.

17. வறுமைக்கோட்டிற்க்கு கீழ் வாழும் ஏழை தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ரூ.2,000 வழங்கும் திட்டத்தை அமல்படுத்திய மாநிலம் எது?

**விடை:** தமிழகம்

**விளக்கம்:**

1. முதல்வர் பழனிசாமியால் அறிவிக்கப்பட்ட, வறுமைக்கோட்டிற்க்கு கீழ் வாழும் ஏழை தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ரூ.2,000 வழங்கும் திட்டத்துக்கான அரசாணை பிறப்பித்துள்ளது.
2. அதற்கான பயனாளிகளைத் தேர்வு செய்ய அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

18. ஈவி எண்டாஸ்கோப்பி 2019 மாநாடு நடைபெற்ற இடம்?

**விடை:** சென்னை

**விளக்கம்:**

1. 'ஐயேஜ்', 'ஆக்ஸி' மற்றும் 'ஏ.டி.என்.ஆர்.சி.ஓ.ஜி' அமைப்புகளின் சார்பில் 'ஈவி எண்டாஸ்கோப்பி 2019' என்ற அகில இந்திய எண்டாஸ்கோப்பி மாநாடு சென்னையில் நேற்று தொடங்கியுள்ளது.
2. ஐயேஜ்-ன் தலைவர் ரிஷ்மா திலான்பாய்
3. ஐயேஜ்-ன் செயலாளர் கிருஷ்ண குமார்
4. எண்டாஸ்கோப்பி மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் ஜெயஸ்ரீ கஜராஜ்

19. 2018ம் ஆண்டிற்கான தமிழ் தாய் விருது பெறும் அமைப்பு எது?

**விடை:** புவனேஸ்வரம் தமிழ் சங்கம்

**விளக்கம்**

1. 2018ம் ஆண்டிற்கான சித்திரை தமிழ்புத்தாண்டு விருதுகள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது அதில் முக்கியமான சில விருதுகள்
2. தமிழ்தாய் விருது – புவனேஸ்வரம் தமிழ் சங்கம்
3. கபிலர் விருது – மி. காசுமான்
4. இளங்கோவடிகள் விருது – சிலம்பொலி சு.செல்லப்பன்
5. உ.வே.சா விருது – நடன. காசிநாதன்

6. ஜி.யு. போப் விருது – கோ. சந்திர சேகரன்
7. உமறுப் புலவர் விருது – நசீமா பானு
8. சொல்லின் செல்வர் விருது – க. முருகேசன்
9. அம்மா இலக்கிய விருது – உலக நாயகி பழனி

20. மாணவர்களின் ஆங்கிலமொழி பேச்சுத்திறனை வளர்ப்பதற்காக பிரிட்டிஷ் கவுன்சிலுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மாநிலம் எது?

**விடை:** தமிழ்நாடு

**விளக்கம்:**

1. அரசு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் ஆங்கில மொழி பேச்சுத் திறனை வளர்க்க, தமிழக அரசானது பிரிட்டிஷ் கவுன்சிலுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

21. தமிழக அரசு வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கணைகளுக்கான இடஒதுக்கீடு எத்தனை சதவீதம்?

**விடை:** 3 சதவீதம்

**விளக்கம்:**

1. விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கணையருக்கு அரசு வேலைவாய்ப்பில் 3 சதவீதம் இடம் ஒதுக்கீடு செய்ய தமிழக அரசானது அரசாணை பிறப்பித்துள்ளது.

22. இந்தியாவில் இரண்டு கடலோர காவல்படை மாவட்ட தலைமையகம் கொண்டுள்ள முதல் மாநிலம் எது?

**விடை:** தமிழ்நாடு

**விளக்கம்:**

1. தமிழகத்தின் இரண்டாவது கடலோர காவல்படை மாவட்ட தலைமையகம், "தூத்துக்குடியில்" அமைக்கப்பட்டு தமிழக ஆளுநரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
2. இதன் மூலம் இரண்டு கடலோர காவல்படை மாவட்ட தலைமையகங்களை பெற்ற இந்தியாவின் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.
3. முதல் தமிழக கடலோர காவல்படை மாவட்ட தலைமையகம் சென்னையில் அமைந்துள்ளது.

23. “வெப் ரத்னா தங்க விருது” பெற்ற தமிழக மாவட்டம் எது?

**விடை:** வேலூர்

**விளக்கம்:**

1. கணினி மயமாக்கப்பட்ட தகவலை மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில், இணைய தளத்தில் பதிவேற்றம் செய்த, வேலூர் மாவட்டத்திற்கு, “வெப் ரத்னா தங்க விருது” வழங்கப்பட்டுள்ளது.
2. இவ்விருதானது மத்திய தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத்தால் வழங்கப்பட்டது.

# தேசிய நிகழ்வுகள்

1. உலகின் மிக நீளமான “கங்கா எக்ஸ்பிரஸ் சாலை எங்கு அமைய உள்ளது?

**விடை:** உத்திரபிரதேசம்

**விளக்கம்:**

1. உத்திரபிரதேச மாநிலம் 600கி.மீ தூரத்திற்கு உலகின் மிக நீளமான (World’s longest Express way) “எக்ஸ்பிரஸ் சாலை” அமைக்க முடிவு செய்துள்ளது.
2. இதற்கு “கங்கா எக்ஸ்பிரஸ் சாலை” என பெயரிடப்பட்டுள்ளது.

2. புலிகள் கணக்கெடுப்பு பற்றிய மூன்றாவது சர்வதேச மாநாடு நடைபெற்ற இடம் எது?

**விடை:** புதுடெல்லி

**விளக்கம்:**

1. மூன்றாவது புலிகள் கணக்கெடுப்பு பற்றிய சர்வதேச மாநாடு (International Stock Taking Conference on Tiger Conservation – 2019) புதுடெல்லியில் ஜனவரி 28 – 29ம் தேதிகளில் நடைபெற்றது.

3. சுற்றுலாத் துறை தொடங்கியுள்ள ‘ஸ்வதேஷ் தர்ஷன்’ என்ற திட்டத்தை முதன்முதலில் அமல்படுத்திய மாநிலம் எது?

**விடை:** சிக்கிம்

**விளக்கம்:**

1. வடகிழக்கு மாநிலங்களின் முன்னேற்றத்திற்காக 'ஸ்வதேஷ் தர்ஷன்' என்ற திட்டத்தை சுற்றுலாத்துறை தொடங்கியுள்ளது.
2. இத்திட்டத்தை, சிக்கிம் மாநிலம் முதன் முதலில் அமல்படுத்தியுள்ளது.

4. 'இரண்டாவது துலிப் மலர் பூங்கா' எங்கு அமைய உள்ளது?

**விடை:** உத்திரகாண்ட்

**விளக்கம்:**

1. இந்தியாவின் 'இரண்டாவது துலிப் மலர் பூங்கா' வானது உத்திரகாண்ட் மாநிலத்தின், பித்தோராகர் மாவட்டத்தில் 50 ஹெக்டர் நிலப்பகுதியில் அமைய உள்ளது (India's second tulip Garden, Uttarakhand).
2. இந்தியாவின் 'முதலாவது துலிப் மலர் பூங்கா', ஸ்ரீ நகரில் (ஜம்மு & காஷ்மீர்) அமைந்துள்ளது.

5. இந்தியாவின் 'புலிகள் பாதுகாப்புப் படையை'' தொடங்கவுள்ள முதல் மாநிலம் எது?

**விடை:** தெலுங்கானா

**விளக்கம்:**

1. தெலுங்கானா மாநில அரசு, புலிகளின் எண்ணிக்கையை பாதுகாப்பதற்காக, மாநில புலிகள் பாதுகாப்புப் படையை (State tiger Protection Force) உருவாக்க முடிவு செய்துள்ளது.
2. புலிகள் பாதுகாப்புப் படையை உருவாக்கும் இந்தியாவின் முதல் மாநிலம் தெலுங்கானா ஆகும்.

6. காந்தியின் உப்புச் சத்தியாகிரகம் எந்த நாளில் தொடங்கப்பட்டது?

**விடை:** மார்ச் 12, 1930

**விளக்கம்:**

1. தேசிய உப்புச் சத்தியாகிரக நினைவகமானது, தண்டியில் (குஜராத்) அமைக்கப்பட்டுள்ளது.
2. காந்தியின் 71வது நினைவு நாளின் போது இந்நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது.
3. உப்புச் சத்தியாகிரக போராட்டம் 12 மார்ச் 1930 முதல் 6 ஏப்ரல் 1930 வரை நடைபெற்றது. இதில் 78 பேர் கலந்து கொண்டனர். இதில் பங்கேற்ற ஒரே பெண் சரோஜினி நாயுடு என்பது குறிப்பிடத்தக்கது.

7. அமைப்பு சாரா நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் பெயர் என்ன?

**விடை:** பிரதான மந்திரி ஸ்ராம் யோகி மந்தன்

**விளக்கம்:**

1. அமைப்பு சார நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு மாதம் ரூபாய் 3000 ஓய்வூதியம் வழங்குவதற்காக மத்திய இடைக்கால பட்ஜெட்டில், ‘பிரதான மந்திரி ஸ்ராம் யோகி மந்தன்’ என்ற திட்டம் தொடங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

8. இந்திய ராணுவத்துக்கு அமெரிக்காவில் இருந்து எத்தனை ‘சிக் சவர்’ துப்பாக்கிகள் வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது?

**விடை:** 73 ஆயிரம்

**விளக்கம்:**

1. இந்திய ராணுவத்துக்கு அமெரிக்காவில் இருந்து 73 ஆயிரம் ‘சிக் சவர்’ துப்பாக்கிகள் வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.
2. இன்சாஸ் துப்பாக்கிகளுக்கு பதிலாக இந்த துப்பாக்கிகளை வீரர்கள் பயன்படுத்த உள்ளார்கள் என ராணுவம் தெரிவித்துள்ளது.

9. IEA னின் விரிவாக்கம் என்ன?

**விடை:** International Energy Agency

**விளக்கம்:**

1. பியூஷ் கோயல் IEA யின் ‘இரயிலின் எதிர்காலம்’(The future of Rail) என்ற அறிக்கையை ஜனவரி 30 (2019) அன்று வெளியிட்டார்.
2. இரயில் சேவையின் தற்போதைய மற்றும் எதிர்கால முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.
3. IEA – International Energy Agency

10. ராட்லே நீர்மின் திட்டம் எந்த நதியில் தொடங்கப்பட்டுள்ளது?

**விடை:** செனாப் நதி

**விளக்கம்:**

1. ஜம்மு காஷ்மீரில் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியானது விஜய்ப்பூர் என்னும் இடத்தில் அமையவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்றது.
2. மேலும் அம்மாநிலத்தின் செனாப் நதியில் கரு நீர்மின் திட்டத்திற்காகவும் (624 மெகா வாட் திறன்), ராட்லே (Ratle) நீர்மின் திட்டத்திற்காகவும் (850 மெகாவாட் திறன்) அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

11. "கலியா சக்ரவிருதி யோஜனா" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

**விடை:** ஒடிசா

**விளக்கம்:**

1. விவசாயிகளுடைய குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்காக ஊக்கத் தொகை வழங்கும் திட்டமான "கலியா சக்ரவிருதி யோஜனா" (Kalia Chhatravritti Yojana) என்னும் திட்டத்தை ஒடிசா மாநில அரசு தொடங்கியுள்ளது.

12. உலக பாரம்பரிய மையம் எங்கு அமைய உள்ளது?

**விடை:** மாயாபூர் (கொல்கத்தா)

**விளக்கம்:**

1. கொல்கத்தாவிற்கு அருகே உள்ள மாயாபூரில் உலக பாரம்பரிய மையம் (WHC – World Heritage Centre, Mayapur) அமையவுள்ளது.
2. இதில் 45 நாடுகளின் 'ஆன்மீக முகாம்கள்' (Spiritual Camps) அமையவுள்ளது.

13. ஆயூஷ்மான் பாரத் திட்டம் எப்பொழுது தொடங்கப்பட்டது?

**விடை:** 23 செப்டம்பர், 2018

**விளக்கம்:**

1. ஆயூஷ்மான் பாரத் திட்டத்தில் ஆயூஷ் சேவைகளை ஒருங்கிணைப்பதற்காக, மாநில சுகாதார அமைச்சர்கள் மாநாடு புதுடெல்லியில் பிப்ரவரி 6 (இன்று) நடைபெற உள்ளது.

2. இம்மாநாட்டில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சுகாதார மற்றும் ஆயுஷ் அமைச்சர்கள் பங்கு பெற உள்ளனர்.
3. தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டமான ஆயூஷ்மான் பாரத் திட்டம் செப்டம்பர் 23, 2018 அன்று தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

14. கிளிபோசேட் பூச்சிக் கொல்லி மருந்திற்கு சமீபத்தில் தடைவிதித்துள்ள மாநிலம் எது?

**விடை:** கேரளா

**விளக்கம்:**

1. பயிர்களில் பூச்சிகளின் தாக்கத்தை தீக்கும் கிளிபோசேட் (அமெரிக்காவின் மான்சான்டா நிறுவனத்தின் மருந்து) பூச்சிக் கொல்லி மருந்திற்கு கேரள மாநில அரசானது தடை விதித்துள்ளது.
2. இது மனிதர்களுக்கு புற்றுநோய், சிறுநீரக கோளாறு போன்ற பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

15. தேசிய பசு ஆணையமானது எந்த பெயரில் அமையவுள்ளது?

**விடை:** “ராஷ்ட்ரீய காமதேனு ஆயோக்”

**விளக்கம்:**

1. பசுக்களை பாதுகாத்து பல்வேறு பசு இனங்களை மேம்படுத்துவதன் மூலம் சிறு விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்காக, தேசிய அளவில் “பசு ஆணையம்” அமைக்க மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
2. இந்த தேசிய பசு ஆணையம் “ராஷ்ட்ரீய காமதேனு ஆயோக்” என்ற பெயரில் அமையவுள்ளது.

16. சிந்து நதி டால்பின்களை மாநிலத்தின் நீர்வாழ் விலங்காக அறிவித்துள்ள மாநிலம் எது?

**விடை:** பஞ்சாப்

**விளக்கம்:**

1. அம்ரீந்தர் சிங் (பஞ்சாப் முதல்வர்), பியாஸ் நதியில் மட்டுமே காணப்படும் ஒரு அரிதான பாலூட்டியான “சிந்து நதி டால்பின்களை” பஞ்சாப் மாநிலத்தின் நீர்வாழ் விலங்காக அறிவித்துள்ளார்.

17. ஆசியான் - இந்தியா இளைஞர் மாநாட்டின் இரண்டாவது பதிப்பு எங்கு நடைபெற்றது?

**விடை:** கௌகாத்தி (அசாம்)

**விளக்கம்:**

1. கௌகாத்தியில்(அசாம்) இரண்டாவது "ஆசியான் - இந்தியா இளைஞர் மாநாட்டை" அம்மாநில முதல்வர் 'சர்பானந்த சோனோவால்' தொடங்கி வைத்தார்.
2. கருத்துரு: - "இணைப்பு பகிர்ந்து கொள்ளும் செழுமைக்கானப் பாதை" என்பதாகும்.
3. ASEAN – India Youth Summit

18. "தர்வாஷா பாண்ட் - பகுதி 2" என்ற பிரச்சாரத்தை தொடங்கியுள்ள அமைச்சகம் எது?

**விடை:** மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகம்

**விளக்கம்:**

1. இந்தியாவில் உள்ள அனைத்து கிராமங்களிலும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லா கிராமமாக உருவாக்கிட, மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சகம் "தர்வாஷா பாண்ட் - பகுதி 2" (Darwaza Band – Part 2) என்ற பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.
2. இப்பிரச்சாரத்திற்கு உலக வங்கியானது தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

19. விலை மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி பிரிவை (PMRU) " உருவாக்கிய முதல் மாநிலம் எது?

**விடை:** கேரளா

**விளக்கம்:**

1. கேரளா, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களின் விலைகளை கண்காணிக்கும் "விலை மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி பிரிவை" உருவாக்கியுள்ள முதல் மாநிலமாகும்
2. PMRU – Price Monitoring and Research Unit

20. இசை மற்றும் நடனத் திருவிழாவான "சோபன் - 2019" எங்கு நடைபெற்றது?

**விடை:** புதுடெல்லி

**விளக்கம்:**

1. பாரம்பரியக் கலைகளை "இளைய கலைஞர்கள்" பின்பற்றுவதை ஊக்குவிக்கும் வகையில் புதுடெல்லியில் "2019 – சோபன்" என்ற 6 நாள் இசை மற்றும் நடனத் திருவிழா நடத்தப்பட்டது.

21. சர்வதேச நறுமணப் பொருட்கள் மாநாட்டின் நான்காவது பதிப்பு எங்கு நடைபெற்றது?

**விடை:** ஹைதராபாத்

**விளக்கம்:**

1. சர்வதேச நறுமணப் பொருள் மாநாட்டின் நான்காவது பதிப்பானது, தெலுங்கானாவின் தலைநகரான ஹைதராபாத்தில் நடத்தப்பட்டது.
2. 2019ம் மாநாட்டிற்கான கருத்துரு:- "மாற்றங்களின் சவால்கள், மதிப்புச் சங்கிலியை மறுவரையறை செய்தல்" என்பதாகும்.

22. ஆயுஷ்மான் பாரத் திட்டம் எப்பொழுது எங்கு தொடங்கப்பட்டது?

**விடை:** செப்டம்பர் 23, 2018, ராஞ்சி

**விளக்கம்:**

1. உலகின் மிகப்பெரிய சுகாதார திட்டமான ஆயுஷ்மான் பாரத் என்றழைக்கப்படும் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய திட்டத்தினை பிரபலபடுத்துவதற்கான புதுடெல்லியில், PM-JAY என்ற செயலி தொடங்கப்பட்டுள்ளது.
2. ஆயுஷ்மான் பாரத் திட்டமானது செப்டம்பர் 23, 2018 அன்று ராஞ்சியில் தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

23. பழங்குடியின திட்டங்களை சீராய்வதற்காக விவேக் பண்டிட் தலைமையில் குழு அமைத்த மாநிலம் எது?

**விடை:** மகாராஷ்டிரா

**விளக்கம்:**

1. மகாராஷ்டிரா மாநில அரசானது அம்மாநிலத்தில் பழங்குடியினருக்காக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பல்வேறு திட்டங்களை சீராய்வதற்காக "விவேக் பண்டிட்" என்பவர் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது.

24. சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் அணுசக்தி என்பதை நோக்கமாகக் கொண்ட "Parmanu Tech" என்ற மாநாடு நடைபெற்ற இடம்?

**விடை:** புது டெல்லி

**விளக்கம்:**

1. அணுசக்தி மற்றும் கதிர்வீச்சு தொழில்நுட்பங்கள் தொடர்பான பிரச்சனைகளைப் பற்றி விவாதிப்பதற்கான "Parmanu Tech" என்னும் மாநாடு புதுடெல்லியில் நடைபெற்றது.
2. இம்மாநாட்டின் முக்கிய நோக்கம்:- ''சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் அணுசக்தி'' என்பதாகும். இம்மாநாட்டை வெளியுறவுத் துறை மற்றும் அணுசக்தி துறை இணைந்து நடத்தியுள்ளது.

25. ''சஹரி சம்ரிதி உத்சவ்'' என்ற திட்டத்தை எந்த அமைச்சகம் தொடங்கியுள்ளது?

**விடை:** மத்திய நகர்புற மற்றும் வீட்டுவசதி அமைச்சகம்

**விளக்கம்:**

1. தீன்தயாள் உபாத்யாய – தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் வரம்பை, மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு நீட்டிக்க, மத்திய நகர்புற மற்றும் வீட்டுவசதி அமைச்சகம் 'சஹரி சம்ரிதி உத்சவ்' என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.

26. ஹெலிகாப்டரிலிருந்து எதிரிகளின் பீரங்கிகளை தாக்கி அழிக்க வல்ல ''ஹலினா'' ஏவுகணையை உருவாக்கிய அமைப்பு எது?

**விடை:** DRDO (பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு)

**விளக்கம்:**

1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) உருவாக்கியுள்ள ''ஹலினா'' ஏவுகணையானது சந்திப்பூரில் (ஒடிசா) வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது.
2. இந்த ஏவுகணையானது ஹெலிகாப்டரிலிருந்து எதிரிகளின் பீரங்கிகளை தாக்கி அழிக்கவல்லது.
3. DRDO வின் தலைவர் - சத்தீஷ் ரெட்டி
4. DRDO - Defence Research and Development Organisation

27. சர்வதேச அறிவுசார்ந்த சொத்து பட்டியல் - 2019ல் முதலிடத்தில் உள்ள நாடு எது?

**விடை:** அமெரிக்கா

**விளக்கம்:**

1. US Chamber of Commerce வெளியிட்டுள்ள சர்வதேச அறிவுசார்ந்த சொத்து பட்டியல் (மொத்தம் 50 நாடு) - 2019ல் (Intellectual Property Index) இந்தியாவானது 36வது இடம் பிடித்துள்ளது.
2. 2018ல் இந்தியா 44வது இடத்தைப் பிடித்துள்ளது.
3. 2019ல் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

28. வன விலங்குகளில் புலம்பெயர்ந்த இனங்களை பாதுகாப்பதற்கான மாநாட்டின் 13வது பதிப்பு எங்கு நடைபெற உள்ளது?

**விடை:** காந்திநகர் (குஜராத்)

**விளக்கம்:**

1. ஐக்கிய நாடுகளின் "சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தின்" கீழ், "வன விலங்குகளில் புலம் பெயர்ந்த இனங்களை (CMS) பாதுகாப்பதற்கான மாநாட்டின்" 13வது பதிப்பை, இந்தியாவானது 2020ம் ஆண்டு, பிப்ரவரி 15 முதல் 22 வரை காந்திநகரில் (குஜராத்) நடத்த உள்ளது.

29. ஜம்மு & காஷ்மீரின் எந்த பகுதி மூன்றாவது நிர்வாகப் பிரிவாக பிரிக்கப்பட்டது?

**விடை:** லடாக்

**விளக்கம்:**

1. ஜம்மு & காஷ்மீர் மாநில அரசானது லடாக் பகுதியின் நிர்வாக/வருவாய் பிரிவை, மாநிலத்தின் மூன்றாவது நிர்வாகப் பிரிவாக அறிவித்துள்ளது.
2. ஜம்மு & காஷ்மீர் மாநில நிர்வாக அரசால் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஜம்மு & காஷ்மீரின் ஆளுநர் "சத்தியபால் மாலிக்" ஆவார்.
3. ஜம்மு & காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து பற்றி கூறும் அரசியலமைப்பு விதி – 370

4. ஜம்மு & காஷ்மீருக்கான அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாள் - 26 ஜனவரி 1957

30. இந்திய தேர்தல் ஆணையத்தின், தகவல்களை பெறுவதற்கான வாக்காளர் உதவி எண் என்ன?

**விடை:** 1950

**விளக்கம்:**

1. இந்திய தேர்தல் ஆணையமானது, குடிமக்களுக்கு தங்கள் விவரங்களை சரிபார்க்கவும், விவரங்களை மாற்றவும், புதுப்பிப்பதற்காகவும் மற்றும் திருத்தங்களை மாற்றவும் "வாக்காளர் சரிபார்ப்பு மற்றும் தகவல் திட்டம்" ஒன்றை தொடங்கியுள்ளது.
2. இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இதற்கான உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. வாக்காளர் உதவி எண் 1950ல் அனைத்து குடிமக்களும் தகவல்களை பெறலாம்.

31. Petro Tech – மாநாட்டின் 13வது பதிப்பு எங்கு நடைபெற்றது?

**விடை:** கிரெட்டர் நொய்டா (உத்திரப் பிரதேசம்)

**விளக்கம்:**

1. எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் தங்களது அனுபவங்களை பரிமாறிக் கொள்வதற்கான, PETRO TECH – மாநாட்டின் 13வது பதிப்பு உத்திரப் பிரதேச மாநிலத்தின் கிரெட்டர் நொய்டாவில் நடைபெற்றது.

32. எந்த நாடு இந்தியாவிற்கு சினூக் ரக ராணுவ ஹெலிகாப்டர்களை வழங்கியுள்ளது?

**விடை:** அமெரிக்கா

**விளக்கம்:**

1. விமான தயாரிப்பில் முன்னணியில் உள்ள அமெரிக்காவின் போயிங் நிறுவனம், புதிதாக நான்கு சினூக் ரக இராணுவ ஹெலிகாப்டர்களை இந்தியாவிற்கு வழங்கியுள்ளது.
2. இந்த ஹெலிகாப்டர்கள், பேரிடர் காலங்களில் மீட்பு பணிகளுக்கும், போர்க் காலங்களில் அகதிகளை வெளியேற்றவும், நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்வதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

33. எந்த நாட்டுடன் இந்தியாவானது, கடல்சார் தொடர்பான நீலப் பொருளாதார வளர்ச்சியில் ஒத்துழைப்பை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது?

**விடை:** நார்வே

**விளக்கம்:**

1. இந்தியா மற்றும் நார்வே ஆகிய நாடுகளுக்கிடையே நீலப்பொருளாதார வளர்ச்சியில் ஒத்துழைப்பை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
2. நீலப் பொருளாதார துறையில் சர்வதேச அளவில் முன்னணி நாடாக நார்வே உள்ளது.

34 விவசாயிகளுக்கு நிதியுதவி அளிப்பதற்காக ‘அன்னதத்தா சுஹிபாவா’ என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

**விடை:** ஆந்திரப் பிரதேசம்

**விளக்கம்:**

1. ஆந்திரப் பிரதேச மாநில அரசானது விவசாயிகளுக்கு நிதியுதவி அளிப்பதற்காக ‘அன்னதத்தா சுஹிபாவா’ (Annadata Sukhibhava Scheme) என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

35. புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்திய புற்றுநோய் சமூகம் எந்த பிரசாரத்தை தொடங்கியுள்ளது?

**விடை:** “சுவஸ்த் நாரி – சக்தி ஹமாரி”

**விளக்கம்:**

1. சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய பெண்களிடையே புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் அந்நோயின் ஆரம்பகால நிலை பற்றிய அறிதலை ஏற்படுத்துவது ஆகியவற்றுக்காக “சுவஸ்த் நாரி – சக்தி ஹமாரி” என்ற பிரச்சாரத்தை இந்திய புற்றுநோய் சமூகம் (Indian Cancer Society – ICS) தொடங்கியுள்ளது.
2. இது உலக புற்றுநோய் தினத்தின் (பிப்ரவரி 4) போது தொடங்கப்பட்டது.

36. இமாச்சலப் பிரதேசத்தின் முதல் மெகா உணவுப் பூங்கா எங்கு அமைய உள்ளது?

**விடை:** உனா மாவட்டம்

**விளக்கம்:**

1. இமாச்சலப் பிரதேசத்தின் உணவு சேகரிக்கும் முறைக்கு ஊக்கமளித்து, உணவு வீணாவதை தடுப்பதற்காக, அம்மாநிலத்தின் முதல் மெகா உணவுப் பூங்காவானது "உனா மாவட்டத்தில்" அமையவுள்ளது.
2. இமாச்சலப் பிரதேசத்தின் குளிர்கால தலைநகர் - தர்மசாலா மற்றும் கோடைக்கால தலைநகர் - சிம்லா

37. இந்தியா எந்த நாட்டுடன் மருத்துவ மற்றும் ஹோமியோபதி துறையில் ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளது?

**விடை:** பிரேசில்

**விளக்கம்:**

1. இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளுக்கிடையே மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மரபுசார் அமைப்புகளின் துறைகள் மீது ஒத்துழைப்பு நல்கிடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது இதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

38. 13வது ஐக்கிய நாடுகளவையின் இடம்பெயரும் உயிரினங்கள் பாதுகாப்பு மாநாட்டின் இலச்சனையாக அறிவிக்கப்பட்டது எது?

**விடை:** கிரேட் இந்தியன் பஸ்டார்ட் (Great Indian Bustard)

**விளக்கம்:**

1. 13வது ஐக்கிய நாடுகளவையின் "இடம் பெயரும் உயிரினங்கள் பாதுகாப்பு மாநாட்டின்" (conference of parties (cop) of the UN convention on the conservation of migratory species), இலச்சனையாக "கிரேட் இந்தியன் பஸ்டார்ட்" (GIB) பறவை அறிவிக்கப்பட்டுள்ளது.
2. இக்கூடுகையானது 2020ம் ஆண்டு பிப்ரவரி 15 – 22 தினங்களில் குஜராத்தின் காந்திநகரில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

39. நாட்டின் முதலாவது மேக கண்காணிப்பகம் (Cloud Observatory) எங்கு அமைந்துள்ளது?

**விடை:** மூணாறு (கேரளா)

**விளக்கம்:**

1. இமாலய பிராந்தியத்தில் வானிலை முன்னறிவிப்பு மற்றும் மேக வெடிப்பு நிகழ்வுகளை கண்காணிப்பதற்காக உத்திரகாண்ட் மாநிலத்தின் ஹெக்ரி கர்வால் மாவட்டத்தில் (Tehri Garhwal) மேக கண்காணிப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. (Himalayan Cloud Observatory) இது நாட்டின் 2வது மேக கண்காணிப்பகம் ஆகும்.
2. இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை மற்றும் IIT-கான்பூர் ஆகிய அமைப்புகள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

**குறிப்பு:**

3. நாட்டின் முதலாவது மேக கண்காணிப்பகம், கேரளாவின் மூணாறு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

40. பேரிடர் நிவாரணப் பயிற்சியான "ராகத் பயிற்சி" எங்கு பரிசோதிக்கப்பட்டது?

**விடை:** இராஜஸ்தான்

**விளக்கம்:**

1. பேரிடர் நிவாரணப் பயிற்சியான "ரகாத் பயிற்சி" (Rahat Exercise) ராஜஸ்தானின் ஜெய்ப்பூர், கோட்டா ஆல்வார் ஆகிய பகுதிகளில் பரிசோதிக்கப்பட்டது.
2. இந்திய இராணுவத்தின் உதவியுடன், ஜெய்ப்பூரைச் சேர்ந்த சப்த சக்தி பிரிவு ஒரு மனிதாபிமான கூட்டு உதவிப் பயிற்சியும் பேரிடர் நிவாரணப் பயிற்சியையும் நடத்தியது.

41. "அருந்ததி" என்னும் திருமண உதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் எது?

**விடை:** அசாம்

**விளக்கம்:**

1. மணப் பெண்களுக்கு இலவசமாக தங்கத்தை வழங்கும் வகையில் அசாம் மாநில அரசானது "அருந்ததி" எனப்படும் புதிய திட்டத்தை தொடங்கியுள்ளது.
2. இத்திட்டத்தின் கீழ், அசாமின் அனைத்து சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கும் திருமணத்தின் போது 10 கிராம் தங்கம் வழங்கப்பட உள்ளது.

**குறிப்பு:**

3. தமிழகத்தில், மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டம் - 1989-ன் கீழ் ஏழை பெண்களுக்கு 8 கிராம் தங்கம் வழங்கப்படுவது குறிப்பிடத் தக்கது.

42. நாட்டின் இரண்டாவது “தொழில் முனைவோர் பூங்கா” எங்கு அமையவுள்ளது?

**விடை:** ஒடிசா (புவனேஸ்வர்)

**விளக்கம்:**

1. நாட்டின் இரண்டாவது “மின்னணு தொழில் முனைவோர் பூங்காவது” (Electropreneur Park), ஒடிசா மாநிலத்தின் புவனேஸ்வர் நகரில் தொடங்கப்படவுள்ளது.
2. இப்பூங்காவானது இந்திய மென்பொருள் தொழில்நுட்ப பூங்கா (STPI) அமைப்பின் கீழ் செயல்படவுள்ளது.
3. நாட்டின் முதலாவது “மின்னணு தொழில் முனைவோர் பூங்காவை” டெல்லி பல்கலைக்கழகம் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

43. இந்திய – ஜெர்மன் சுற்றுச்சூழல் மாநாட்டின் 3வது பதிப்பு நடைபெற்ற இடம் என்ன?

**விடை:** புதுடெல்லி

**விளக்கம்:**

1. சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுப்பதற்கான இந்திய – ஜெர்மன் சுற்றுச்சூழல் மாநாட்டின் 3வது பதிப்பு (3rd Indo – German Environment Forum) புதுடெல்லியில் நடைபெற்றது.
2. இம்மாநாட்டின் மையக் கருத்து (Theme):- “Cleaner Air, Greener Economy” என்பதாகும்.

44. எங்கு ஏ.கே.203 ரக துப்பாக்கிகள் தயாரிக்கப்படவுள்ளது?

**விடை:** அமேதியில் உள்ள அரசு போர் தளவாட தொழிற்சாலை

**விளக்கம்:**

1. ரஷ்ய நாட்டின் காப்புரிமை பெற்ற ஏ.கே.203 ரக துப்பாக்கிகளை இந்தியாவிலேயே தயாரித்து கொள்வதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்தாகவுள்ளது.
2. இந்த ஒப்பந்தத்தின் படி, 7.5 லட்சம் ஏ.கே.203 ரக துப்பாக்கிகள் அமேதியில் (உத்திரபிரதேசம்) உள்ள அரசு போர் தளவாட தொழிற்சாலையில் தயாரிக்கப்படவுள்ளது.

45. ஆதாருடன் பான் எண்ணை இணைப்பதற்கான கடைசி தேதி என்ன?

**விடை:** மார்ச் 31

**விளக்கம்:**

1. வருமான வரி கணக்கை தாக்கல் செய்வோர் அத்துடன் தங்களது ஆதார் எண் மற்றும் பான் கார்டு விவரத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், ஆதாருடன் பான் எண்ணை இணைப்பதற்கான கடைசி தேதியாக மார்ச் 31 என்றும் மத்திய வருமானவரித் துறை ஆணையம் தெரிவித்துள்ளது.

46. எந்த விமானம் ஏர் இந்தியா ஒன் என்று அழைக்கப்படுகிறது?

**விடை:** போயிங் 777

**விளக்கம்:**

1. ஏவுகணை தாக்குதலைத் தடுக்கும் போயிங் 777 (LAIRCM) விமானத்தை 190 மில்லியனுக்கு இந்திய அரசு வாங்க உள்ளது.
2. இதை ஜனாதிபதி மற்றும் பிரதமர் நீண்ட தூர பயணத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
3. இது 'ஏர் இந்தியா ஒன்' அல்லது 'இந்தியன் ஏர் ∴போர்ஸ் ஒன்' என்று அழைக்கப்படும்.
4. LAIRCM – என்பது மனிதத் தாக்குதல், மற்றும் ஏவுகணை தாக்குதலில் இருந்து விமானத்தைப் பாதுகாக்கும் ஓர் திட்டமாகும்.

47. பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதியாகும் பொருட்களுக்கு தற்போது எத்தனை சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது?

**விடை:** 200 சதவீதம்

**விளக்கம்:**

1. புல்வாமா தீவிரவாத தாக்குதலை எதிர்த்து பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதியாகும் அனைத்துப் பொருட்களுக்கும் 200 சதவீதம் சுங்கவரி விதிக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
2. மேலும், பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டு இருந்த "வர்த்தகத்திற்க்கு உகந்த நட்புறவு நாடு" (Most Favored Nation) என்ற சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு ரத்து செய்துள்ளது.

3. காஷ்மீரில் உள்ள புல்வாமா பகுதியில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலில் ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்துகள் (60 கிலோ) உபயோகப்படுத்தப்பட்டுள்ளதாக (ஜெய்ஷ் இ முகம்மது இயக்கம்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
4. அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மன் உள்ளிட்ட 50 நாடுகள் இந்தியாவின் நிலைப்பாட்டிற்க்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

48. முதலாவது LAWASIA மனித உரிமைகள் மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை:** புதுடெல்லி

**விளக்கம்:**

1. முதலாவது “LAWASIA மனித உரிமை மாநாடு”, வழக்கறிஞர் சங்கத்துடன் இணைந்து LAWASIA அமைப்பால் புதுடெல்லியில் நடத்தப்பட்டது.
2. 2019 கருத்துரு – “அரசு அதிகாரம், வணிகம் மற்றும் மனித உரிமைகள் தற்காலத்திய சவால்கள்”

49. “சாரதி சந்தேஷ் வாகினி” திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

**விடை:** உத்திரப்பிரதேசம்

**விளக்கம்:**

1. ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்காக, உத்திரப்பிரதேச குடும்ப நலத் துறையானது “சாரதி சந்தேஷ் வாகினி” என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.
2. இத்திட்டத்தின் கீழ், குடும்ப கட்டுப்பாடு தொடர்பான ஆவணப்படங்கள் மற்றும் திரைப்படங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த 33 வாகனங்கள் தொடங்கப்பட்டுள்ளது.

50. இமாச்சலப் பிரதேசத்தின் 2வது அரசு மொழியாக அங்கீகரிக்கப்பட்ட மொழி எது?

**விடை:** சமஸ்கிருதம்

**விளக்கம்:**

1. சமஸ்கிருத மொழியை, 2வது அரசு மொழியாக அங்கீகரிக்கும் சட்ட மசோதா இமாச்சலப் பிரதேச சட்டப் பேரவையில் நிறைவேறியுள்ளது.
2. அலுவலக மொழி - ஹிந்தி

51. வாயு சக்தி 2019 – னை இந்திய விமானப் படை எங்கு மேற்கொண்டது?

**விடை:** இராஜஸ்தான்

**விளக்கம்:**

1. இந்திய விமானப் படையின் ஸ்பெக்ட்ரம் போர் திறனை நிரூபிக்கும் விதமாக, "வாயு சக்தி – 2019" (Vayu Shakti – 2019) என்ற பயிற்சியை போக்ரான்(ராஜஸ்தான்) மேற்கொண்டுள்ளது.
2. இந்தப் பயிற்சியானது இந்திய விமானப் படை தலைவர் "பி.எஸ். தானோவின்" முன்னிலையில் நடைபெற்றது.

52. தெலுங்கானாவில் புதிதாக உருவாக்கப்பட்ட இரு மாவட்டங்கள் எவை?

**விடை:** முலுகு மற்றும் நாராயண்பாத

**விளக்கம்:**

1. முலுகு மற்றும் நாராயண்பாத் என்ற இரு புதிய மாவட்டங்களை தெலுங்கானா வருவாய் துறை உருவாக்கியுள்ளது.
2. இதன் மூலம் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 33.

53. நான்காவது உலக பாராமெடிக்கல் மற்றும் மருத்துவ கருவிகள் மாநாடு – 2019 எங்கு நடைபெற்றது?

**விடை:** பெங்களுர்

**விளக்கம்:**

1. நான்காவது உலக பாராமெடிக்கல் மற்றும் மருத்துவ கருவிகள் மாநாடு – 2019 (India Pharma – 2019) பெங்களுரில் நடைபெற்றது.
2. இம்மாநாட்டின் மையக்கருத்து:- Enabling Quality Affordable Healthcare and that of India Medical Device – 2019 என்பதாகும்.

54. 40வது சர்வதேச பாலைவன திருவிழா எங்கு நடைபெற்றது?

**விடை:** இராஜஸ்தான் (ஜெய்சல்மார்)

**விளக்கம்:**

1. 40வது சர்வதேச பாலைவன திருவிழாவானது இராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்சல்மாரில் நடைபெற்றது.

2. இந்த திருவிழாவின் மூலம், வளமான பண்பாட்டு பாரம்பரியத்தை வெளிப்படுத்தி, உலகம் முழுவதிலிருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும்.

55. "112 அவசர அழைப்பு" என்ற மொபைல் சேவையை தொடங்கிய முதல் வடகிழக்கு மாநிலம் எது?

**விடை:** நாகலாந்து

**விளக்கம்:**

1. பெண்களின் பாதுகாப்பிற்காகவும் மற்றும் அனைத்து விதமான அவசர உதவிகளுக்காவும் ஒரே "அவசர அழைப்பு எண் - 112" என்ற மொபைல் சேவையை தமிழகம் உள்ளிட்ட 16 மாநிலங்களில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த சேவையை மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகம் இணைந்து தொடங்கியுள்ளது.
2. இந்த மொபைல் சேவையை முதன் முதலில் வடகிழக்கு மாநிலமான நாகலாந்து தொடங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து இமாச்சல பிரதேசம் இந்த மொபைல் சேவையை தொடங்கியுள்ளது.

56. சர்வதேச பூஜ்ஜிய நோக்கு மாநாடு - 2019 எங்கு நடைபெற்றது?

**விடை:** மும்பை

**விளக்கம்:**

1. தொழிலாளர்களின் பணியிட பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான 'சர்வதேச பூஜ்ஜிய நோக்கு மாநாடு' (International vision zero conference) மும்பையில் நடைபெற்றது.
2. இம்மாநாட்டை இந்தியாவின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த சமூக விபத்து காப்பீடு அமைப்பு ஆகியவை இணைந்து நடத்தியுள்ளது.

57. 'விவசாய தலைமைத்துவ கூடுகை – 2019' எங்கு நடைபெற்றது?

**விடை:** ஹரியானா

**விளக்கம்:**

1. நான்காவது 'விவசாய தலைமைத்துவ கூடுகை – 2019' (Agri leadership summit 2019) ஹரியானாவின் சோனிபாட் மாவட்டத்தின் கானவுர் நகரில் நடைபெற்றது.



WeShine Academy™

2. இம்மாநாட்டில் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவது குறித்தும், உற்பத்தியை பெருக்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

58. நீர்வழிப் போக்குவரத்துகளுக்காக, LADIS என்ற தளத்தை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?

**விடை:** இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம்

**விளக்கம்:**

1. நீர்வழிப் போக்குவரத்துகளை சரியான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக, லேடிஸ் (LADIS) என்ற புதிய தளத்தை, இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் (Inland Waterway Authority of India) அறிமுகப்படுத்தியுள்ளது.
2. இது கப்பல் மற்றும் சரக்கு கப்பல் ஆகியவற்றின் நிகழ்நேரத் தகவல்களை அளிக்கும்.

59. தேசிய கிராமப்புற பொருளாதார மாற்றத்திற்கான திட்டமானது எந்த திட்டத்தின் கீழ் செயல்படுத்த உள்ளது?

**விடை:** தீன் தயாள் அந்தியோதயா யோஜனா

**விளக்கம்:**

1. "தேசிய கிராமப்புற பொருளாதார மாற்றத்திற்கான திட்டம்" (National Rural Economic Transformation Project) எனும் புதிய திட்டத்தை, தீன்தயாள் அந்தியோதயா யோஜனா எனப்படும் தேசிய கிராமப்புற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமல்படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. தீன் தயாள் அந்தியோதயா யோஜனா, கிராமப்புற மக்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்த 2011ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

60. "முக்கிய மந்திரி விரிதாஜன் ஓய்வூதிய திட்டம்" என்ற அனைவருக்குமான ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ள மாநிலம் எது?

**விடை:** பீகார்

**விளக்கம்:**

1. 60 வயதைக் கடந்த அனைவருக்குமான “முக்கியமந்திரி விரிதாஜன் ஓய்வூதிய திட்டம்” - (MVPY) மற்றும் 60 வயதிற்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்களுக்காக, “பீகார் பட்ராகர் சம்மன் யோஜனா” (BPSY) என்ற ஓய்வூதிய திட்டத்தையும் பீகார் தொடங்கியுள்ளது.
2. இவ்விரு திட்டங்களும் ஏப்ரல் 1, 2019ல் முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

61. தொடக்கக் கல்வி ஆசியா(2019) மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை:** ஜெய்ப்பூர்(இராஜஸ்தான்)

**விளக்கம்:**

1. தொடக்கக் கல்வி ஆசியா(2019) மாநாடானது ஜெய்ப்பூரில்(இராஜஸ்தான்) 2 நாட்கள் நடைபெற்றது.
2. இந்த நிகழ்ச்சியானது கல்வி தொடர்பான ஆராய்ச்சி, குழந்தைகளின் தொடக்க நிலைக் கல்வியின் மேம்பாட்டிற்கான கல்வி மற்றும் கொள்கைகள் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்துகிறது.
3. ‘‘நமது குழந்தைகள், நமது எதிர் காலம்’’ என்பது இந்த நிகழ்ச்சியின் குறிக்கோளாகும்.

62. கடல்பசுக்களை பாதுகாக்கும் “கடற்புற்கள் வளர்ப்பு திட்டம்” எப்பகுதியில் தொடங்கப்பட்டது?

**விடை:** மன்னார் வளைகுடா

**விளக்கம்:**

1. மன்னார் வளைகுடா பகுதியில் கடல்பசுக்களை பாதுகாப்பதற்காக “கடற்புற்கள் வளர்ப்பு திட்டம்” என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:**

**2.** மன்னார் வளைகுடாவானது 2001 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவால் உயிர் கோள பாதுகாக்கப்பட்ட இடம் என அறிவிக்கப்பட்டது. தாவரவியலாளர்களின் சொர்க்கம் என மன்னார் வளைகுடா அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

63. “கௌ சேவா ஆயோக்” என்ற பெயரில் பசுநல அறக்கட்டளையை தொடங்கியுள்ள மாநிலம் எது?

**விடை:** இமாச்சல் பிரதேசம்

**விளக்கம்:**

1. பசுக்களை பாதுகாப்பதற்காக ஹிமாச்சலப் பிரதேச மாநில அரசானது “கௌ சேவா ஆயோக்” என்ற பசுநல அறக்கட்டளையை அமைத்துள்ளது.
2. இதன் தலைமையகம் சிம்லாவில் உள்ளது.

64. “முக்கிய மந்திரி யுவ ஸ்வாபியன் யோஜனா” என்ற திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?

**விடை:** மத்திய பிரதேசம்

**விளக்கம்:**

1. பொருளாதாரத்தின் பின் தங்கிய இளைஞர்களுக்காக 100 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்குவதற்காக, மத்தியப் பிரதேச மாநில அரசானது “முக்கிய மந்திரி யுவ ஸ்வாபியன் யோஜனா” (Mukhyamantri Yuva Swabhiman Yojana) என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.
2. இதன் பொருளாதாரத்தின் பின்தங்கிய இளைஞர்கள் 100 நாட்கள் வேலைவாய்ப்பு மூலம் 13,500 ரூபாய் பெற முடியும்.

65. இந்தியாவின் முதல் மனித காவல் ரோபோவை அறிமுகப்படுத்திய மாநிலம் எது? அந்த ரோபோவின் பெயர் என்ன?

**விடை:** கேரளா, KP-BOT

**விளக்கம்:**

1. ‘‘KP-BOT’’ என்ற இந்தியாவின் முதல் மனித காவல் ரோபோவை கேரள போலீஸ் அறிமுகப்படுத்தியுள்ளது.
2. பெண் உருவத்தில் இருக்கும் இந்த ரோபோவிற்கு சப்-இன்ஸ்பெக்டர் ரேங்க் வழங்கப்பட்டுள்ளது.

66. “Pradhan Mantri Kisan Samman Nidhi Yojana” என்ற திட்டம் எங்கு முதன்முதலில் தொடங்கப்பட்டது?

**விடை:** உத்திரபிரதேசம் (கோரக்பூர்)

**விளக்கம்:**

1. விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6000 உதவித் தொகை வழங்கும் “பிரதான் மந்திரி விவசாய நலத்திட்டம்” (Pradhan Mantri Kisan Samman Nidhi Yojana)

என்ற திட்டத்தை பிரதமர் மோடி அவர்கள் பிப்ரவரி 24, 2019 அன்று உத்திரபிரதேசத்தின் கோரக்பூரில் தொடங்கி வைத்துள்ளார்.

2. இந்த நிதியுதவியானது, 2 ஹெக்டேருக்கு குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு, மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

67. “ஏரோ இந்தியா – 2019” எங்கு நடைபெற்றது?

**விடை:** பெங்களூர்

**விளக்கம்:**

1. ஆசியாவின் மிகப்பெரிய விமானக் கண்காட்சியான “ஏரோ இந்தியா – 2019” பெங்களூரில் நடைபெற்றது. இந்த கண்காட்சியில் பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனமான லாக்ஹீடு மார்ட்டின்( அமெரிக்கா), F-21 என்ற பல பணிகள் மேற்கொள்ளும் போர் விமானத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
2. இந்த போர் விமானம் “இந்தியாவில் தயாரிப்போம்” என்ற திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட உள்ளது.

68. எந்த மாநிலம் படகு ஆம்புலன்ஸ் சேவையை தொடங்கியுள்ளது?

**விடை:** ஒடிசா

**விளக்கம்:**

1. ஆம்புலன்ஸ் வாகனங்கள் செல்ல முடியாத ஆறுகள் சூழ்ந்த பகுதியில் “படகு ஆம்புலன்ஸ்” சேவையை ஒடிசா தொடங்கியுள்ளது.
2. இச்சேவையின் முதல் படகானது “நம்பிக்கை வாகனம்” என்ற பெயரில் கேந்தரபரா மாவட்டத்தின் பாடிஹர் என்ற இடத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

69. 14வது விவசாய அறிவியல் காங்கிரஸின் கருத்துரு என்ன?

**விடை:** விவசாய மாற்றத்திற்கான புதுமைகள் (Innovation for Agricultural Transformation)

**விளக்கம்:**

1. 2022ம் ஆண்டில் “புதிய இந்தியா” மற்றும் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்தல் ஆகியவைகளை நோக்கமாகக் கொண்ட, வேளாண் அறிவியல் காங்கிரஸின் 14வது பதிப்பு புதுடெல்லியில் நடைபெற்றது. (14th Agriculture Science Congress).

2. கருத்துரு : ‘‘விவசாய மாற்றத்திற்கான புதுமைகள்’’ (Innovation for Agricultural Transformation)

70. இராணுவத்தின் மிக உயரிய விருதான ‘‘பரம் வீர் சக்ரா’’ விருது பெற்ற முதல் இந்திய இராணுவ வீரர் யார்?

**விடை:** சோம்நாத் சர்மா

**விளக்கம்:**

1. சுதந்திரத்திற்குப் பிறகு நடைபெற்ற போர் மற்றும் அமைதி காக்கும் நடவடிக்கையில் உயிர் நீத்த இராணுவ வீரர்களின் நினைவாக புதுடெல்லியில் உள்ள இந்தியா கேட் அருகில் ‘‘தேசிய போர் நினைவிடத்தை’’ பிரதமர் நாட்டிற்கு அர்பணித்துள்ளார்.
2. இந்நினைவகத்தில் பரம்வீர் சக்ரா விருது பெற்ற 21 வீரர்களின் சிலைகள் இடம் பெற்றுள்ளன. முதன் முதலில் பரம்வீர் சக்ரா விருது பெற்ற முதல் இந்திய இராணுவ வீரர் ‘‘சோம்நாத் சர்மா’’ என்பவர் ஆவார்.

   குறிப்பு:
3. 1971ல் நடைபெற்ற இந்தியா – பாகிஸ்தான் போரில் இறந்த இராணுவ வீரர்களின் நினைவாக ‘‘அமர்ஜவான் ஜோதி’’ என்ற கட்டடம் புதுடெல்லியில் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

71. வைரஸ் ஹெபடைடிஸின் விழிப்புணர்வு நல்லெண்ண தூதர் யார்?

**விடை:** அமிதாப் பச்சன்

**விளக்கம்:**

1. உலகளவில் பொது சுகாதார பிரச்சனையாக உள்ள வைரஸ் ஹெபடைடிஸ் நோயை இந்தியாவில் ஒழிப்பதற்கான தேசிய அளவிலான செயல் திட்டத்தை (National Action Plan – Viral Hepatitis) மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அஸ்வினி குமார் சௌபே மும்பையில் தொடங்கியுள்ளார்.
2. இந்த செயல்திட்டம் ஹெபடைடிஸின் விழிப்புணர்வு நல்லெண்ண தூதராக உள்ள அமிதாப் பச்சன் முன்னிலையில் தொடங்கப்பட்டுள்ளது.
3. நோக்கம் : ‘‘2030-க்குள் ஹைபடைடிஸ் நோயை ஒழித்தல்’’

72. “உலகளாவிய ஆரோக்கியத்தில் டிஜிட்டல் பங்களிப்பு” மாநாட்டின் நான்காவது பதிப்பு எங்கு நடைபெற்றது?

**விடை:** புதுடெல்லி

**விளக்கம்:**

1. நான்காவது “உலகளாவிய ஆரோக்கியத்தில் டிஜிட்டல் பங்களிப்பு” உச்சி மாநாடானது (4th Global Digital Health Partnership summit), மத்திய சுகாதார அமைச்சர் J.P. நட்டா புதுடெல்லியில் தொடங்கி வைத்துள்ளார்.
2. இம்மாநாடானது ஆரோக்கியத்தில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் மூலம் திறம்பட செயல்படுத்துதலை அடிப்படையாகக் கொண்டது.

73. பொதுமக்கள் அரசு துறைகளை எளிதாக தொடர்பு கொள்ள “1905” என்ற உதவி எண்ணை தொடங்கிய மாநிலம் எது?

**விடை:** உத்திரகாண்ட்

**விளக்கம்:**

1. அரசு துறைகள் விரைவாக செயல்படுவதை உறுதிபடுத்தி, அதன் பணிகளில் வெளிப்படை தன்மையை அதிகரிப்பதற்காக, உத்திரகாண்ட் மாநில அரசானது பொதுப் புகாரை மக்கள் அளிப்பதற்காக “1905” என்ற உதவி எண்ணை தொடங்கியுள்ளது.
2. இத்திட்டத்தின் கீழ் பொதுமக்கள் எந்தவொரு துறையையும் எளிதாக தொடர்பு கொள்ள முடியும்.

74. “உதித்தெழும் இந்தியா” உச்சி மாநாடு – 2019 எங்கு நடைபெற்றது?

**விடை:** புதுடெல்லி

**விளக்கம்:**

1. புதிய இந்தியாவை உருவாக்குவதற்கான திட்டங்களை பற்றி விவாதிப்பதற்கான “உதித்தெழும் இந்தியா” உச்சி மாநாடு 2019 – ஆனது புதுடெல்லியில் நடைபெற்றது.
2. இம்மாநாட்டின் கருத்துரு:- “அரசியலுக்கு அப்பால்; தேசத்தின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை” (Beyond Politics; Detining National Priorities) என்பதாகும்.

75. உயிரி தொழில்நுட்பம் தொடர்பான ஆசியாவின் மிகப்பெரிய உயிரி கூட்டு மன்றம் "பயோ ஆசியா – 2019" எங்கு நடைபெற்றது?

**விடை:** ஹைதராபாத் (தெலுங்கானா)

**விளக்கம்:**

1. ஆசியாவின் மிகப்பெரிய உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மன்றத்தின் 16வது பதிப்பான "பயோ ஆசியா – 2019" (Bio Asia – 2019) தெலுங்கானாவின் ஹைதராபாத் நகரில் நடைபெற்றது.
2. இம்மன்றத்தினை தெலுங்கானா ஆளுநர் ஈ.எஸ்.எல். நரசிம்ஹன் தொடங்கி வைத்தார்.
3. இம்மாநாட்டின் கருத்துரு:- "வாழ்க்கை அறிவியல் 4.0 - இடையூறுகளை சீர்குலைத்தல்" (Life Science 4.0 – Disrupt the Disruption") என்பதாகும்.

76. "இளைஞர் பாராளுமன்ற விழா" (Youth Parliament Festival) எங்கு நடைபெற்றது?

**விடை:** புது டெல்லி

**விளக்கம்:**

1. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி பற்றிய விழிப்புணர்வை இளைஞர்களுக்கிடையே உருவாக்குவதற்காக "கேலோ இந்தியா" என்ற மொபைல் செயலியை பிரதமர் மோடி அவர்கள் புதுடெல்லியில் நடைபெற்ற "இளைஞர் பாராளுமன்ற விழாவில்" அறிமுகப்படுத்தியுள்ளார்.
2. இந்த மொபைல் செயலியானது இந்திய விளையாட்டு ஆணையத்தால் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# உலக நிகழ்வுகள

1. தனிம வரிசை அட்டவணை யாரால் எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது?

**விடை:** டிமிட்ரி மெண்டலீவ், 1869

**விளக்கம்:**

1. தனிம வரிசை அட்டவணை கண்டுபிடிக்கப்பட்டு 150வது ஆண்டை நினைவு கூறும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை மற்றும்

We Shine Academy TM

யுனெஸ்கோ அமைப்பு ‘2019ம் ஆண்டை சர்வதேச தனிம வரிசை அட்டவணை (The International Year of the periodic table 2019) ஆண்டாக’ அறிவித்துள்ளது.

2. தனிம வரிசை அட்டவணை 1869ம் ஆண்டு ரஷ்ய அறிவியலாளர்கள் ‘டிமிட்ரி மெண்டலீவ்’ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2. ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் இணைந்து அறிமுகப்படுத்திய டிஜிட்டல் நாணயம் எது?

**விடை:** அபெர்

**விளக்கம்:**

1. ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியா (UAE and Saudi Arabia) ஆகிய நாடுகள் இணைந்து ‘அபெர்’(Aber) என்ற பொதுவான டிஜிட்டல் நாணயத்தை தொடங்கியுள்ளன.

3. சட்ட விதிகளை மீறிய குற்றத்திற்காகக் “கூகுள்” நிறுவனத்திற்கு ரஷ்யா எவ்வளவு ரூபாய் அபராதம் விதித்துள்ளது?

**விடை:** 7 ஆயிரத்து 600 அமெரிக்க டாலர்கள் (இந்திய மதிப்பில் ரூ.5.4லட்சம்)

**விளக்கம்:**

1. ரஷ்ய அரசால் தடை செய்யப்பட்ட தளங்கள், “கூகுள்” தேடுபொறியில் தொடர்ந்து இடம் பெற்று வந்ததைத் தொடர்ந்து சட்ட விதிகளை மீறிய குற்றத்திற்காகக் “கூகுள்” நிறுவனத்திற்கு 7 ஆயிரத்து 600 அமெரிக்க டாலர்கள் (இந்திய மதிப்பில் ரூ.5.4லட்சம்) அபராதம் விதிக்கப்பட்டது.

4. மலேசியாவில் உள்ள ஆட்சிமுறை எது?

**விடை:** கூட்டாட்சி முறை

**விளக்கம்:**

1. மலேசியாவில் ‘‘சுல்தான் அப்துல்லா சுல்தான் அகமது ஷா’’ மன்னராக பதவி ஏற்றார். துணை மன்னராக ‘‘சுல்தான் நஸ்ரின் ஷா’’ பதவி ஏற்றுள்ளார்.
2. மன்னர் முடியாட்சியின் கீழ், கூட்டாச்சி முறையிலான அரசியல் சட்டம் அமலில் உள்ளது
3. 2016ம் ஆண்டு இறுதியில் பதவிேற்ற மன்னர் ஐந்தாம் சுல்தான் முகமது. தனது பதவிகாலம் முடிவதற்கு முன்பாகவே கடந்த 6ம் தேதி பதவி விலகினார்

5. டிரம்ப் மற்றும் ஜின்பிங்கின் சந்திப்பு எங்கு நடக்க உள்ளது?

**விடை:** வியட்நாம் - டா நாங்

**விளக்கம்:**

1. அமெரிக்கா மற்றும் சீனா இடையே நடந்த வர்த்தகப் போர் தொடர்பாக கடந்த மாதம் அர்ஜெண்டினாவில் நடந்த "ஜி 20 உச்சி மாநாட்டின்" போது அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், சீன அதிபர் ஜிக்பிங்கும் சந்தித்து பேசினர். அப்பொழுது இருதரப்பு வர்த்தகப் போரும் மார்ச் 1ம் தேதி வரை 90 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன் அடுத்த கட்ட பேச்சுவார்த்தை வியட்நாம் துறைமுக நகரான "டா நாங்கில்" வருகிற 27, 28ம் தேதிகளில் நடைபெற உள்ளது.

6. ராட்லே நீர்மின் திட்டம் எந்த நதியில் தொடங்கப்பட்டுள்ளது?

**விடை:** செனாப் நதி

**விளக்கம்:**

1. ஜம்மு காஷ்மீரில் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியானது விஜய்ப்பூர் என்னும் இடத்தில் அமையவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்றது.
2. மேலும் அம்மாநிலத்தின் செனாப் நதியில் கரு நீர்மின் திட்டத்திற்காகவும் (624 மெகா வாட் திறன்), ராட்லே (Ratle) நீர்மின் திட்டத்திற்காகவும் (850 மெகாவாட் திறன்) அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

7. "கலியா சக்ரவிருதி யோஜனா" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

**விடை:** ஒடிசா

**விளக்கம்:**

1. விவசாயிகளுடைய குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்காக ஊக்கத் தொகை வழங்கும் திட்டமான "கலியா சக்ரவிருதி யோஜனா" (Kalia Chhatravritti Yojana) என்னும் திட்டத்தை ஒடிசா மாநில அரசு தொடங்கியுள்ளது.

8. உலக பாரம்பரிய மையம் எங்கு அமைய உள்ளது?

**விடை:** மாயாபூர் (கொல்கத்தா)

**விளக்கம்:**

1. கொல்கத்தாவிற்கு அருகே உள்ள மாயாபூரில் உலக பாரம்பரிய மையம் (WHC – World Heritage Centre, Mayapur) அமையவுள்ளது.
2. இதில் 45 நாடுகளின் ‘ஆன்மீக முகாம்கள்’ (Spiritual Camps) அமையவுள்ளது.

9. ஆயூஷ்மான் பாரத் திட்டம் எப்பொழுது தொடங்கப்பட்டது?

**விடை:** 23 செப்டம்பர், 2018

**விளக்கம்:**

1. ஆயூஷ்மான் பாரத் திட்டத்தில் ஆயூஷ் சேவைகளை ஒருங்கிணைப்பதற்காக, மாநில சுகாதார அமைச்சர்கள் மாநாடு புதுடெல்லியில் பிப்ரவரி 6 (இன்று) நடைபெற உள்ளது.
2. இம்மாநாட்டில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சுகாதார மற்றும் ஆயுஷ் அமைச்சர்கள் பங்கு பெற உள்ளனர்.
3. தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டமான ஆயூஷ்மான் பாரத் திட்டம் செப்டம்பர் 23, 2018 அன்று தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

10. எப்போது நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்டது? அதன் தலைமையகம் எங்குள்ளது?

**விடை:** 1949, புருஸ்ஸல்ஸ்

**விளக்கம்:**

1. நேட்டோ (NATO – North Atlantic Treaty Organization) அமைப்பு உருவாக்கப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடைந்ததை சிறப்பிக்கும் பொருட்டு லண்டனில்(பிரிட்டன் தலைநகர்) டிசம்பர் மாதத்தில் சிறப்பு மாநாடு நடைபெறவுள்ளது.
2. நேட்டோ அமைப்பு 4 ஏப்ரல், 1949ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
3. இதன் தலைமையகம் புருஸ்ஸல்ஸ் (பெல்ஜியம்)

11. “நசர் (NASR)” என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சமீபத்தில் சோதனை செய்துள்ள நாடு எது?

**விடை:** பாகிஸ்தான்

**விளக்கம்:**

1. பாகிஸ்தான் ராணுவம் ''நசர்'' (NASR) என்ற குறுகிய வரம்புடைய (Short – Range) தரையிலிருந்து தரையிலக்கைத் தாக்கும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

12. ''உலக பெண்கள் முன்னேற்றம் மற்றும் பொருளாதார வளர்ச்சி (WGDP)'' என்ற திட்டத்தை இந்தியாவில் செயல்படுத்த உள்ள நாடு எது?

**விடை:** அமெரிக்கா

**விளக்கம்:**

1. பெண்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதன் மூலம், அவர்களது பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகை செய்வதற்கான இரண்டு திட்டங்களை அமெரிக்காவானது இந்தியாவில் செயல்படுத்த உள்ளது.
2. இத்திட்டத்திற்கு ''உலக பெண்கள் முன்னேற்றம் மற்றும் பொருளாதார வளர்ச்சி'' (WGDP) என்று பெயரிடப்பட்டுள்ளது. இதன் செயல் தலைவராக இவாங்கா டிரம்ப் நியமிக்கப்பட்டுள்ளார்.

13. நேட்டோ இராணுவக் கூட்டமைப்பின் 30வது உறுப்பினராக சமீபத்தில் இணைந்துள்ள நாடு எது?

**விடை:** மாசிடோனியா

**விளக்கம்:**

1. நேட்டோ (NATO) இராணுவக் கூட்டமைப்பின் 30வது உறுப்பினராக ''மாசிடோனியா'' இணைந்துள்ளது.
2. இதற்கான வரலாற்று ஒப்பந்தம், நேட்டோ செயலர் ஜெனரல் ஜென்ஸ் ஸ்டோல்டென்பெர்க் மற்றும் மாசிடோனியாவின் வெளியுறவு மந்திரி நிகோலி டிமிட்ரோவ் இடையே கையெழுத்தாகியுள்ளது.

**குறிப்பு:**

3. NATO உருவாக்கப்பட்ட ஆண்டு – 1949
4. இதன் 29வது உறுப்பினராக ''மான்டென்ங்ரோ'' இணைந்தது குறிப்பிடத்தக்கது.

14. டிரம்ப் மற்றும் கிம் ஜோங் உன் ஆகியோரின் முதல் சந்திப்பு எந்நாளில் நடைபெற்றது?

**விடை:** ஜூன் 12, 2018



We Shine Academy

**விளக்கம்:**

1. டிரம்ப் (அமெரிக்க அதிபர்) மற்றும் கிம் ஜோங் உன் (வடகொரிய அதிபர்) - ன் இரண்டாவது சந்திப்பானது வரும் பிப்ரவரி 26, 27 ஆகிய தேதிகளில் வியட்நாம் தலைநகர் ஹனோயில் நடைபெற உள்ளது.
2. இருவருக்குமிடையேயான முதல் சந்திப்பு ஜூன் 12, 2018 அன்று சிங்கப்பூரில் உள்ள சென்டோசா நகரில் நடைபெற்றது.

15. எந்த வெளிநாட்டு நீதிமன்றத்தில் ஹிந்தியை மூன்றாவது அதிகாரப்பூர்வ மொழியாக சேர்த்துள்ளது?

**விடை:** அபுதாபி நீதிமன்றம்

**விளக்கம்:**

1. வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு நீதி வழங்குவதற்கான நோக்கத்துடன் அபுதாபி நீதிமன்றத்தில் மூன்றாவது அதிகாரப்பூர்வ மொழியாக ஹிந்தி சேர்க்கப்பட்டுள்ளது.

16. ஐ.நா. உணவு மற்றும் வேளாண் கழகத்தின் (UN FAO) தலைமையகம் எங்குள்ளது?

**விடை:** ரோம் (இத்தாலி)

**விளக்கம்:**

1. ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (UN's FAO) பொது இயக்குநர் பதவிக்கு NITI Aayog உறுப்பினர் "ரமேஷ் சந்த்" என்பவர் இந்திய அரசின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.
2. ஐ.நா. உணவு மற்றும் வேளாண் கழகம் (UN FAO) அக்டோபர் 16, 1945ல் உருவாக்கப்பட்டது.
3. இதன் தலைமையகம் இத்தாலியின் ரோம் நகரில் உள்ளது.

17. தைவானின் புதிய பிரதமராக யார் நியமிக்கப்பட்டுள்ளார்?

**விடை:** சூ செங் - சங்

**விளக்கம்:**

1. தைவானில் தற்போது உள்ள பிரதமர் வில்லியம் லாய் தனது பதவியை ராஜனாமா செய்வதால், புதிய பிரதமராக சூ செங் - சங்கை, அதிபர் சை இங் - வென் நியமித்துள்ளார்.

2. இதற்கு முன் சூ செங் - சங் கடந்த 2006ம் ஆண்டு பிரதமராக நியமிக்கப்பட்டிருந்தார்.

18. இந்திய நாட்டின் கடவுச்சீட்டை பயன்படுத்தி எத்தனை நாடுகளுக்கு நுழைவு இசைவு இல்லாமல் பயணம் செய்ய முடியும்?

**விடை:** 61 நாடுகள்

**விளக்கம்:**

1. இந்திய நாட்டின் கடவுச்சீட்டை பயன்படுத்தி ஒருவர் 61 நாடுகளுக்கு நுழைவு இசைவு இல்லாமல் பயணம் செய்ய இயலும். இப்பட்டியலில் ஜப்பான் முதலிடத்தில் உள்ளது. ஜப்பான் கடவுச்சீட்டை பயன்படுத்தி 190 நாடுகளுக்கு விசா இல்லாமல் செல்ல முடியும். 189 நாடுகளுடன் சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் இரண்டாவது இடத்தில் உள்ளன. 158 நாடுகளுடன் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் மூன்றாவது இடத்தில் உள்ளது.

19. உலக அரசின் உச்சி மாநாடு – 2019 எங்கு நடைபெறுகிறது?

**விடை:** துபாய் (ஐக்கிய அமீரகம்)

**விளக்கம்:**

1. உலக நாடுகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு சிறந்த நடைமுறைகள் மற்றும் தீர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு தனித்துவமான தளத்தை வழங்குவதற்காக, உலக அரசின் உச்சி மாநாட்டின் (World Government Summit) ஏழாவது பதிப்பு துபாயில் (ஐக்கிய அமீரகம்) நடைபெறவுள்ளது.
2. இந்த மாநாடானது, உலகம் முழுவதும் அரசாங்கங்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் தளமாக உள்ளது.

20. அமான் - 19 (AMAN – 19) என்ற பன்னாட்டு கடற்படை பயிற்சி எங்கு நடைபெற்றது?

**விடை:** பாகிஸ்தான்

**விளக்கம்:**

1. பாகிஸ்தானின் கராச்சி கடற்படை கப்பல் கட்டும் தளத்தில், "அமைதிக்காக ஒன்றுபடுதல்" (Together For Peace) என்ற கருத்துருவுடன் உலகம் முழுவதிலும்

46 நாடுகள் பங்குபெறும் பன்னாட்டு கடற்படை பயிற்சியான “அமான் - 19” (AMAN – 19) பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

2. இப்பயிற்சியானது கடலில் பொதுவான ஆபத்துகளை எதிர் கொள்வதில் இருக்கும் செயல்முறைகளை உருவாக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

21. உலக நிலையான அபிவிருத்தி உச்சி மாநாடு 2019 எங்கு நடைபெற்றது?

**விடை:** புதுடெல்லி

**விளக்கம்:**

1. உலக நிலையான அபிவிருத்தி உச்சி மாநாடு 2019 (WSDP – World Sustainable Development Summit), புதுடெல்லியில் “Attaining the 2030 Agenda : Delivering On our Promise” என்ற மையக்கருத்தில் நடைபெற்றது.
2. இம்மாநாட்டில் பிஜி நாட்டு பிரதமர் “ஃபிராங் பைனிமாராமா” (Frank Bainimarama) என்பவருக்கு “நிலையான வளர்ச்சி மேம்பாட்டு தலைமை விருது – 2019 வழங்கப்பட்டுள்ளது.

22. இந்தியாவுடன் தூதரக உறவு ஏற்பட்டு 70 ஆண்டுகள் சமீபத்தில் நிறைவு செய்துள்ள நாடு எது?

**விடை:** அர்ஜென்டினா

**விளக்கம்:**

1. இந்தியா – அர்ஜென்டினா இடையேயான தூதரக உறவு ஏற்படுத்தப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் வகையில் அர்ஜென்டினா அதிபர் மவுரிசியோ மக்ரி (Mauricio Macri) 3 நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

23. இந்தியா எந்த நாட்டுடன் கம்பெனி செயலாளர் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?

**விடை:** மலேசியா

**விளக்கம்:**

1. இந்தியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கிடையே கம்பெனி செயலாளர் துறையில் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
2. இரு நாடுகளிலும் உள்ள தொழில் புரியும் கம்பெனி செயலாளர்கள் ஆசியா – பசுபிக் மண்டலத்தில் எளிதாக சென்று வருவதற்கு இந்த ஒப்பந்தம் உதவும்.

24. நிலவிற்கு ‘‘பெரேஷீட் (Beresheet)’’ என்ற ஆளில்லா விண்கலத்தை அனுப்பியுள்ள நாடு எது?

**விடை:** இஸ்ரேல்

**விளக்கம்:**

1. நிலவினைப் பற்றிய ஆய்விற்காக, பெரேஷீட் (Beresheet) எனப்படும் ஆளில்லா விண்கலத்தை இஸ்ரேல் நாடானது, பால்கன் - 09 என்ற இராக்கெட் மூலம் நிலவில் தரையிறக்க உள்ளது.

25. இந்தியா எந்த நாட்டுடன் தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியில் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

**விடை:** சவுதி அரேபியா

**விளக்கம்:**

1. இந்தியா மற்றும் சவுதி அரேபியா இடையே தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியில் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
2. மேலும் இருநாடுகளுக்கிடையேயான முதலீட்டு உறவுகளை மேம்படுத்தும் வகையில் இந்திய அரசின் ‘‘முதலீடு செய் இந்தியா’’ திட்டம் மற்றும் சவுதி அரேபியாவின் ‘‘முதலீட்டு ஆணையம் செயல்திட்டம்’’ தொடங்கப்பட உள்ளது.

26. புல்வாமா தாக்குதலை தொடர்ந்து, பாக்கிஸ்தானிற்கு அளிக்கப்பட்டு வந்த நிதி உதவியை நிறுத்திய நாடு எது?

**விடை:** அமெரிக்கா

**விளக்கம்:**

1. புல்வாமா தாக்குதலை தொடர்ந்து, பாக்கிஸ்தானிற்கு அளிக்கப்பட்டு வந்த ரூ.7,100 கோடி நிதி உதவியை அமெரிக்கா நிறுத்தியுள்ளது.

27. நிலவில் ஆய்வுகள் மேற்கொள்வதற்காக, இஸ்ரேலின் ஸ்பேஸ்- ஐஎல் என்ற தனியார் அமைப்பால் உருவாக்கப்பட்ட விண்கலம் எது?

**விடை:** பெரஷீத்

**விளக்கம்:**

1. நிலவில் ஆய்வு மேற்கொள்வதற்காக, இஸ்ரேலின் ஸ்பேஸ்-ஐஎல் என்ற தனியார் அமைப்பால் உருவாக்கப்பட்ட பெரஷீத் விண்கலம், அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்திலிருந்து ஃபால்கன் 9 என்ற ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

28. எந்த நாடு சோலார் அமைப்பில் 73-வது நாடாக இணைந்துள்ளது.

**விடை:** சவுதி அரேபியா

**விளக்கம்:**

1. 2015 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாரிஸ் பருவநிலை மாற்றத்திற்கான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சோலார் அமைப்பின் 73வது நாடாக சவுதி அரேபியா இணைந்துள்ளது.
2. 72-வது நாடாக அர்ஜென்டினா சமீபத்தில் இணைந்தது குறிப்பிடத்தக்கது.

29. இந்தியாவின் உதவியுடன் “தகவல் தொழில்நுட்ப பூங்கா” இலங்கையில் எங்கு அமையவுள்ளது?

**விடை:** யாழ்பாணம்

**விளக்கம்:**

1. இலங்கையில் வாழும் இந்தியர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான இந்தியாவின் உதவியுடன் இலங்கையின் யாழ்பாணத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமையவுள்ளது.
2. இதற்காக இந்தியாவானது 25கோடி கடனுதவி வழங்க உள்ளது.

**குறிப்பு:**

3. இலங்கைக்கான இந்தியாவின் உயர் ஆணையராக தரஞ்சித் சிங் உள்ளார்.

30. RIC (ரஷ்யா – சீனா - இந்தியா) அமைப்பின் 16வது வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாடு எங்கு நடைபெறவுள்ளது?

**விடை:** வூசென் (சீனா)

**விளக்கம்:**

1. ரஷ்யா – சீனா - இந்தியா நாடுகள் இணைந்த “RIC” அமைப்பின், 16வது வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூட்டம் (16th RIC Foreign Ministerial

Meeting) சீனாவின் வூசென் (Wuzhen) நகரில் பிப்ரவரி 27ல் நடைபெற உள்ளது.

31. நேபாளத்திற்கான இந்தியத் தூதர் யார்?

**விடை:** மஞ்சீவ் சிங் புரி

**விளக்கம்:**

1. இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கிடையே நீடித்த மற்றும் பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்துவதற்கான இந்தியத் திருவிழா''வானது (Festival of India) காத்மண்டுவில் (நேபாளம்) நடைபெற்றது.
2. இந்தியக் கலாச்சார அமைச்சகத்தின் உதவியுடன் காத்மண்டுவில் உள்ள இந்திய தூதரகத்தில் நடத்தப்பட்டது.
3. நேபாளத்தின் இந்திய தூதர் - மஞ்சீவ் சிங் புரி
4. நேபாளத்தின் பிரதமர் - K.P. சர்மா ஒலி ஆவார்.

32. எந்த இரு நாடுகளுக்கிடையே ''கோப்ரா கோல்டு'' என்ற இராணுவப் பயிற்சி நடைபெற்றது?

**விடை:** தாய்லாந்து மற்றும் அமெரிக்கா

**விளக்கம்:**

1. தாய்லாந்து மற்றும் அமெரிக்கா நாடுகளுக்கிடையேயான ''கோப்ரா கோல்டு'' (Cobra Gold) பயிற்சியானது (இராணுவ) தாய்லாந்தில் நடைபெற்றது.
2. இந்தியா உள்ளிட்ட 29 நாடுகள் பங்கேற்பாளர் அல்லது பார்வையாளர்களாக கலந்து கொண்டன.
3. 2016ம் ஆண்டில் சீனாவுடன் இணைந்து "Observer Plus" பிரிவில் முதல் முறையாக இந்தியா பங்கேற்றது

33. சபஹர் துறைமுகம் எங்கு அமைந்துள்ளது? அதன் வழியாக இந்தியாவிற்கு ஏற்றுமதியை தொடங்கிய நாடு எது?

**விடை:** ஈரான், ஆப்கானிஸ்தான்

**விளக்கம்:**

1. ஆப்கானிஸ்தான் நாடானது, முதன் முதலாக பாகிஸ்தான் வழிப் பாதையை தவிர்த்து ஈரானில் உள்ள சபஹர் துறைமுகம் வழியாக இந்தியாவிற்கு ஏற்றுமதியைத் தொடங்கியுள்ளது.

34 எந்த இரு நாடுகளுக்கிடையே "சம்பிரிதி – 2019" என்ற இராணுவப் பயிற்சி நடைபெற்றது?

**விடை:** இந்தியா – வங்காள தேசம்

**விளக்கம்:**

1. இந்தியா மற்றும் வங்காள தேச நாடுகளுக்கிடையேயான இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இராணுவப் பயிற்சியான "சம்ப்ரிடி – 2019" (Sampriti – 2019) ஆனது வங்காள தேசத்தில் உள்ள டாங்கெல் பகுதியில் நடைபெற்றது.

**குறிப்பு:-**

2. இந்தியாவுடன் அதிக நீளம் (4096 km) கொண்ட எல்லையை பகிர்ந்து கொள்ளும் நாடு வங்காள தேசம் என்பது குறிப்பிடத்தக்கது.
3. இந்தியா – வங்காளதேச எல்லை கோட்டின் பெயர் - பூர்பச்சால் எல்லை கோடு (Purbachal Line)

35. நைஜிரியா நாட்டின் அதிபராக சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

**விடை:** முகம்மது புஹாரி

**விளக்கம்:**

1. ஆப்பிரிக்கக் கண்டத்தின் மிக அதிக மக்கள் தொகை கொண்ட நாடான நைஜிரியாவின் அதிபராக "முகம்மது புஹாரி" என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் மூன்று மில்லியனுக்கும் அதிகமான வாக்குகள் பெற்று தன்னை எதிர்த்த "அழகு அபுபக்கரை" தோற்கடித்துள்ளார்.

# விருதுகள்

1. எந்த மாநிலம் "ஸ்வஸ்த் பாரத் யாத்ரா" இயக்கத்தில் சிறந்த மாநிலமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

**விடை**: தமிழ்நாடு

**விளக்கம்:**

1. இந்தியாவின் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையத்தின் (FSSAI) 100 நாள் நுகர்வோர் சேவை திட்டமான "ஸ்வஸ்த் பாரத் யாத்ரா" (Swasth Bharat Yatra) தேசிய பிரச்சார இயக்கத்தில் தமிழ்நாடு ஒட்டு மொத்த அளவில் சிறந்த மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அக்டோபர் 16, 2018ல் தொடங்கப்பட்டது.

2. சிறந்த மினி ரத்னா பொதுத்துறை நிறுவனத்திற்கான விருது பெற்ற அமைப்பு எது?

**விடை:** நுமாலிகார்க் சுத்திகரிப்பு நிறுவனம்

**விளக்கம்:**

1. புது டெல்லியில் நடைபெற்ற 6வது பொதுத் துறை விருதுகள் வழங்கும் விழாவில், யுக்தி சார் செயல்பாடுகள் நிதியியல் பிரிவில் சிறந்த மினி ரத்னா பொதுத்துறை நிறுவனத்திற்கான விருதை, நுமாலிகார்க் சுத்திகரிப்பு நிறுவனம் (Numaligarh Refinery Limited) பெற்றுள்ளது. NRL என்பது பாரத் பெட்ரோலியத்தின், மினி ரத்னா நிறுவனமாகும் (அசாம்).

3. ஆஸ்திரேலியாவின் இலக்கியத்திற்கான விக்டோரியா விருது – 2019 யாருக்கு வழங்கப்பட்டது?

விடை: பெஹ்ருஸ் பூசானி

**விளக்கம்:**

1. ஆஸ்திரேலியா நாட்டின் இலக்கியத்திற்கான உயர்ந்த விருதான விக்டோரியா விருது – 2019 (2019 Victorian Prize for Literature), பெஹ்ருஸ் பூசானி (Behrouz Boochani) என்ற ஈரானிய அகதி பெற்றுள்ளார். இவருக்கு "No Friend But the Mountains: Writing from Manus Prison" என்ற படைப்பிற்கு இவ்விருது வழங்கப்பட்டது.

4. சமூக நீதிக்கான "K. வீரமணி விருது" யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை:** P.S. கிருஷ்ணன்

**விளக்கம்:**

1. சமூக நீதிக்கான "K. வீரமணி விருதானது" P.S. கிருஷ்ணன் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் "இந்தியாவில் சமூக விலக்கு மற்றும் நீதி (Social Exclusion and Justice in India), ஒரு சாலை வரைபடம்" (A Road map) போன்ற புத்தகங்களை எழுதியுள்ளார்.

5. "இலண்டன் நகரத்தின் சுதந்திரம்" (Freedom of the city of London) என்ற பட்டம் எந்நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது?

**விடை:** SBI – UK

**விளக்கம்:**

1. இந்தியா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்திற்கு (UK) இடையேயான உறவை மேம்படுத்துவதில் தன்னுடைய பங்கை செலுத்தியதற்காக எஸ்பிஐ வங்கியின் ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள பிராந்திய தலைமையக வங்கிக்கு "இலண்டன் நகரத்தின் சுதந்திரம்" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

6. கனட, திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை:** தீபா மேத்தா

**விளக்கம்:**

1. கனடாவின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தால் வழங்கப்படும் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கனட திரைப்படத் தயாரிப்பாளர் தீபா மேத்தா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

7. இஸ்ரேல் நாட்டின் "மில்லியன் டாலர் டான் டேவிட் பரிசை" வென்ற இந்தியர் யார்?

**விடை:** சஞ்சய் சுப்ரமணியன்

**விளக்கம்:**

1. இஸ்ரேல் நாட்டின் உயரிய விருதான "மில்லியன் டாலர் டான் டேவிட் பரிசு" (Million Dollar Dan David Prize), இந்தியாவைச் சேர்ந்த வரலாற்று அறிஞர் சஞ்சய் சுப்ரமணியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அவரது "Inter – cultural encounters between Asian Eropoans and People of North and South America

during the early Modern Era” என்ற வரலாற்று ஆராய்ச்சிக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

8. தென்கொரியா சியோல் அமைதி விருதை பிப்ரவரி 22ம் தேதி யாருக்கு வழங்குகிறது?

**விடை:** பிரதமர் மோடி

**விளக்கம்:**

1. பிப்ரவரி 22ம் தேதி பிரதமர் மோடிக்கு சியோல் அமைதி விருதை தென்கொரியா வழங்குகிறது

9. 2016 ஆம் ஆண்டிற்கான, கலாச்சார நல்லிணக்கத்திற்கான தாகூர் விருது பெற்றவர் யார்?

**விடை:** ராம் சூடர் வஞ்சி (Ram Sutar Vanji)

**விளக்கம்:**

1. 2014, 2015 & 2016 ஆண்டிற்கான, கலாச்சார நல்லிணக்கத்திற்கான தாகூர் விருது, ராம்நாத் கோவிந்தால்( இந்தியக் குடியரசத் தலைவர்) பிப்ரவரி 18 (இன்று) வழங்கப்படுகிறது. விருதுகள் பெற்றோர் விவரம்: 2014 – ராஜ்குமார் சிங்கஜித் சிங் (Rajkumar Sighajit Singh) 2015 – சஹாய்னாட் (Chhayanaut) 2016 – ராம் சூடர் வஞ்சி (Ram Sutar Vanji)

10. தூய்மை பாரதம் திட்டத்தை செயல்படுத்தியதற்கான ஸ்வெச்சத்தா சிறப்பு விருதில் மூன்றாம் இடம் பிடித்த மாநகராட்சி எது?

**விடை:** கும்பகோணம் (தமிழ்நாடு)

**விளக்கம்:**

1. தூய்மை இந்தியா (Swatch Bharath) திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாநகராட்சிக்கு வழங்கப்படும் “ஸ்வெச்சத்தா சிறப்பு விருது” (Swachhata Excellence Award), ரைய்கர் (சத்தீஸ்கர்) மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. 2ஆம் இடத்திற்கான விருது, அம்பிகாபுர் (சத்தீஸ்கர்) மாநகராட்சிக்கும், 3ஆம் இடம், தமிழகத்தின் கும்பகோணம் மாநகராட்சிக்கும் வழங்கப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டம் (Swatch Bharath) அக்டோபர் 2, 2014ல் தொடங்கப்பட்டது

11. மார்டின் என்னல்ஸ் மனித உரிமைகள் விருது – 2019 (Martin Ennals Human Rights Award) யாருக்கு வழங்கப்பட்டது.

**விடை:** அப்துல் அஸிஸ் முகமது.

**விளக்கம்:**

1. ஐ.நா. அகதிகளுக்காக மனித உரிமைகள் ஆணையத்தின் (UNHCR) சார்பில் வழங்கப்படும் விருதான "மார்டின் என்னல்ஸ் மனித உரிமைகள் விருது – 2019" ஆனது "அப்துல் அஸிஸ் முகமது" (Abdul Aziz Muhamed) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

12. 2019ம் ஆண்டில் "நிஷான்-இ-பாகிஸ்தானி" விருது யாருக்கு வழங்கப்பட உள்ளது?

**விடை:** முகமது பின் சல்மான்

**விளக்கம்:**

1. பாகிஸ்தானின் உயரிய விருதான "நிஷான்-இ-பாகிஸ்தானி" என்ற விருதானது, சவூதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மான்" அவர்களுக்கு பாகிஸ்தான் நாட்டு அரசால் வழங்கப்பட உள்ளது.

**குறிப்பு:**

2. இந்தியாவிலிருந்து நிஷான்-இ-பாகிஸ்தானி விருது பெற்ற ஒரே நபர், இந்தியாவின் 4வது பிரதமர் மொராஜி தேசாய் (1990ல் வழங்கப்பட்டது) ஆவார்.

13. ஸ்பெயின் நாட்டின் 'கிராண்ட் கிராஸ் விருது' (Grand cross of order of civil merit award) பெற்றவர் யார்?

**விடை:** சுஷ்மா சுவராஜ்

**விளக்கம்:**

1. அரிய சேவை செய்ததற்காக ஸ்பெயின் நாட்டில் வழங்கப்படும் அந்நாட்டின் மிக உயரிய விருதான 'கிராண்ட் கிராஸ்' (Grand Cross of order of civil merit) விருது இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ்-க்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2015ல் நோபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது ஆபத்தான இடத்தில் இருந்த ஸ்பெயின் நாட்டின் 71 பேரை இந்திய

அரசு காப்பாற்றியதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்பட்டது.

14. இந்தியாவின் முதல் "கால்பந்து ரத்னா விருது" யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை:** சுனில் சேத்ரி

**விளக்கம்:**

1. இந்தியாவின் முதல் 'கால்பந்து ரத்னா விருது' சுனில் சேத்ரி–க்கு வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே "பத்மஸ்ரீ" விருதானது சமீபத்தில் வழங்கப்பட்டது. "பத்ம ஸ்ரீ" விருது பெறும் 6வது கால்பந்து வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

15. தென் கொரியாவில் வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றான சியோல் அமைதி விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை:** பிரதமர் நரேந்திர மோடி

**விளக்கம்:**

1. தென் கொரியாவில் வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றான சியோல் அமைதி விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச ஒத்துழைப்பில் அவரது பங்களிப்பையும், சிறப்பான முடிவுகள் மூலம் சர்வதேச பொருளாதார வளர்ச்சிக்கு உதவிகரமாக இருந்தது அகியவற்றைப் பாராட்டி இந்த விருது அளிக்கப்பட்டது.

16. "உலகளாவிய எதிர்காலத்திற்கான இயற்கை விருது – 2019" பெற்ற முதல் பெண்மணி யார்?

விடை: திவ்யா கர்னாடு

**விளக்கம்:**

1. வன விலங்குகள் மற்றும் தாவரங்களை பாதுகாத்ததற்காக வழங்கப்படும் சர்வதேச விருதான "உலகளாவிய எதிர்காலத்திற்கான இயற்கை விருது – 2019" இந்தியாவின் திவ்யா கர்னாடு (Divya Karnad) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர், இந்த விருதினை பெறும் முதல் பெண்மணி என்ற பெருமையை பெற்றுள்ளார். இதற்கு முன், இவ்விருதினை பெற்ற இந்தியர் - சருதுத் மிஸ்ரா (Charudutt Mishra) என்பவர் ஆவார்.

17. ஆசியன் ஹாக்கி அமைப்பின் 2018ம் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை பெற்றவர் யார்?

**விடை:** ஹர்மன்பிரீத் சிங்

**விளக்கம்:**

1. ஆசியன் ஹாக்கி சம்மேளனத்தின் 2018ம் ஆண்டின் சிறந்த ஹாக்கி வீரருக்கான விருது இந்தியாவின் "ஹர்மன்பிரீத் சிங்க்கு வழங்கப்பட்டுள்ளது. 2018ம் ஆண்டின் சிறந்த எழுச்சி வீரர் (Rising Player of the Year) விருது "லாரம்சியோமி(இந்தியா)" (Lalremsiami)-க்கு வழங்கப்பட்டது.

18. 91வது ஆஸ்கர் விருது வழங்கும் விழா எங்கு நடைபெற்றது?

**விடை:** லாஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா)

**விளக்கம்:**

1. லாஸ் ஏஞ்சல்ஸ்(அமெரிக்கா) நகரில் நடைபெற்ற 91வது ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில், இந்திய பெண்கள் குறித்து எடுக்கப்பட்ட "பிரியட் எண்ட் ஆ.ஃ.ப் சென்டன்ஸ்" (Period end of sentence) என்ற படத்திற்கு சிறந்த ஆவண குறும் படத்திற்கான விருது வழங்கப்பட்டுள்ளது. இயக்கியவர் - ரெய்கா ஸெஷ்டாப்ச்சி (அமெரிக்கா) (Reyka Zentabchi).

**குறிப்பு:**

1. 91வது ஆஸ்கார் விருதுகள் முக்கியமானவை
2. சிறந்த திரைப்படம் - கிரீன் புக் (Green Book)
3. சிறந்த நடிகர் - ராமி மாலிக் (Rami malek)
4. சிறந்த நடிகை – ஒலி வியா கோல்மன்
5. சிறந்த அனிமேசன் திரைப்படம் - Spiderman into spider verse

# நியமனங்கள்

1. மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** ராஜீவ் நயன் சௌபே

**விளக்கம்:**

1. மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் (UPSC) உறுப்பினராக "ராஜீவ் நயன் சௌபே" (Rajiv Nayan Choubey) என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தில் ஒரு தலைவர் மற்றும் 10 உறுப்பினர்கள் உள்ளனர். இதன் தலைவர் "அரவிந்த் சக்சேனா"

2. இந்திய கடற்படையின் துணைத் தளபதியாக சமீபத்தில் நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** ஜி. அசோக் குமார்

**விளக்கம்:**

1. இந்தியக் கடற்படையின் துணைத் தளபதியாக, தேசிய பாதுகாப்பு கல்விக் கழகத்தின் தலைமைப் பொறுப்பாளராக உள்ள ஜி. அசோக் குமார் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியக் கடற்படையின் தளபதியாக சுனில் லம்பா உள்ளார்.

3. சி.பி.ஐ யின் புதிய இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை:** ரிஷி குமார்

**விளக்கம்:**

1. சி.பி.ஐ யின் புதிய இயக்குனராக ரிஷி குமார் சுக்லா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன் இடைக்கால சி.பி.ஐ இயக்குநராக நாகேஷ்வர ராவ் நியமிக்கப்பட்டிருந்தார்.

4. சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளர் யார்?

**விடை:** ரமேஷ் அபிஷேக்

**விளக்கம்:**

1. தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்பு துறை (DIPP)- யின் செயலாளராக ரமேஷ் அபிஷேக், சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளராக கூடுதல் பொறுப்பை பெற்றுள்ளார்.

5. NCC அமைப்பின் நிர்வாக இயக்குநர் யார்?

**விடை:** இராஜிவ் சோப்ரா (Rajeev Chopra)

**விளக்கம்:**

1. NCC (National Cadet Corps) யின் நிர்வாக இயக்குநராக (Director General Of NCC) இராஜிவ் சோப்ரா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளது. NCC அமைப்பானது 16 ஏப்ரல் 1948ல் உருவாக்கப்பட்டுள்ளது.

6. கொலம்பியக் குடியரசின் புதிய இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** சஞ்சீவ் ரஞ்சன்

**விளக்கம்:**

1. மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகமானது, அர்ஜென்டினாவின் இந்தியத் தூதராக பணியாற்றி வரும் சஞ்சீவ் ரஞ்சன் என்பவரை கொலம்பியக் குடியரசின் புதிய தூதராக நியமித்துள்ளது.

7. சென்னை ICF-ன் பொது மேலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** இராகுல் ஜெயின்

**விளக்கம்:**

1. சென்னை ஒருங்கிணைந்த இரயில் பெட்டி தொழிற்சாலையின் பொது மேலாளராக (ICF General Manager) ''இராகுல் ஜெயின்'' நியமிக்கப்பட்டுள்ளார். ICF - Integral Coach Factory

8. இந்தியாவிற்கான நேபாள தூதராக புதிதாக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** நீலாம்பர் ஆச்சார்யா

**விளக்கம்:**

1. இந்தியாவிற்கான நேபாள தூதராக, நேபாளத்தின் முன்னாள் சட்ட அமைச்சர் நீலாம்பர் ஆச்சார்யா நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு நேபாள அதிபர் வித்யா தேவி பண்டாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

9. சிறுபான்மை நல ஆணைய அமைச்சகம் (Ministry of Minority Affairs) எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது?

**விடை:** 2006

**விளக்கம்:**

1. சிறுபான்மையினர் நல ஆணைய அமைச்சகத்தின் புதிய செயலாளராக ஸ்ரீ சைலேஷ் (Sri Sailesh) என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். சிறுபான்மையினர் நல

அமைச்சகம் 2006 ஜனவரியில் தோற்றுவிக்கப்பட்டது. தேசிய சிறுபான்மை நல ஆணையானது "சிறுபான்மை நல ஆணையச் சட்டம் 1992ன்" படி அமைக்கப்பட்டது. இதன் தலைவர் "சையது காயருல் ஹாசன் ரிஷ்வி"

10. மார்ஷல் தீவு குடியரசு நாட்டிற்கான இந்திய தூதராக சமீபத்தில் நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** "சன்ஜய் குமார் வர்மா"

**விளக்கம்:**

1. மார்ஷல் தீவு குடியரசு நாட்டிற்கான இந்தியாவின் புதிய தூதராக "சன்ஜய் குமார் வர்மா" என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது ஜப்பான் நாட்டிற்கான இந்திய தூதராக உள்ளார்.

11. மத்திய உள்துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலாளராக யார் நியமிக்கப்பட்டுள்ளார்?

**விடை:** ஏ.பி. மகேஸ்வரி

**விளக்கம்:**

1. மூத்த இந்தியக் காவல் பணி அதிகாரி ஏ.பி. மகேஸ்வரி மத்திய உள்துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

12. பூடான் நாட்டிற்கான இந்திய தூதராக சமீபத்தில் நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** "ருச்சீரா காம்போஜ்"

**விளக்கம்:**

1. பூடான் நாட்டிற்கான இந்திய தூதராக "ருச்சீரா காம்போஜ்" என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது தென் ஆப்பிரிக்காவிற்கான உயர் கமிஷனராகவும் செயல்படுகிறார்.

13. உலக வங்கியின் தலைவராக சமீபத்தில் நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** டேவிட் மல்பாஸ்

**விளக்கம்:**

1. உலக வங்கியின் தலைவர் பதவிக்கு டேவிட் மல்பாஸ் (David MalPass) என்பவரை அமெரிக்க அதிபர் டிரம்ப் நியமித்துள்ளார். உலக வங்கியானது

ஜூலை 1945ல் உருவாக்கப்பட்டது. இதன் தலைமையகம் வாசிங்டன் டிசி-யில் உள்ளது.

14. காமன்வெல்த்தின் கற்பதற்கான நல்லெண்ணத் தூதராக சமீபத்தில் நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** கார்த்தியாயினி

**விளக்கம்:**

1. கேரளாவில் "கார்த்தியாயினி" என்ற 96 வயது மாணவி காமன்வெல்த்தின், கற்பதற்கான நல்லெண்ணத் தூதராக (Commonwealth of Learning Goodwill ambassador) நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கேரளாவின் அக்சரலக்ஷம் எழுத்தறிவு திட்டத்தில் 100-க்கு 98 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்தவர். காமன்வெல்த் கற்பித்தல் அமைப்பானது 53 உறுப்பினர் நாடுகளின் மத்தியில் தொலைதூரக் கல்வியையும் திறந்தவெளிக் கல்வியையும் ஊக்குவிக்கின்றது.

15. இந்தியாவின் முதல் பெண் விமானப் பொறியாளர் யார்?

**விடை:** ஹினா ஜெய்ஸ்வால்

**விளக்கம்:**

1. இந்தியாவின் முதல் பெண் விமானப் பொறியாளராக ஹினா ஜெய்ஸ்வால் (சண்டிகர்) நியமிக்கப்பட்டுள்ளார். இவர், விமானப் பொறியாளராக இந்திய விமானப் படையின் ஹெலிகாப்டர் செயல்பாட்டு பிரிவுகளில் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

16. மறைமுக வரி மற்றும் சுங்க வாரியம் தொடங்கப்பட்ட ஆண்டு?

**விடை**: 1964

**விளக்கம்:**

1. மறைமுக வரி மற்றும் சுங்க வாரிய (CBIC) உறுப்பினராக அசோக் குமார் பாண்டே மற்றும் சந்தீப் மோகன் ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வாரியத்தின் தலைவராக S.ரமேஷ் என்பவர் உள்ளார். மறைமுக வரி மற்றும் சுங்க வாரியமானது (CBIC) ஜனவரி 1, 1964ல் ஏற்படுத்தப்பட்டது.

17. இந்திய வானியல் சங்கத்தின் முதல் பெண் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** G.C. அனுபாமா

**விளக்கம்:**

1. இந்திய வானியல் சங்கத்தின் முதல் பெண் தலைவராக 'G.C. அனுபாமா' என்பவர் நியமிக்கப்பட்டுள்ளது. இந்திய வானியல் சங்கம் 1972ல் வைணு பாப்பு என்பவரால் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

18. சென்னை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக சமீபத்தில் நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** செந்தில் குமார் ராமமூர்த்தி

**விளக்கம்:**

1. குடியரசுத் தலைவர், சென்னை உயர்நீதிமன்றத்தின், கூடுதல் நீதிபதியாக செந்தில் குமார் ராமமூர்த்தி – யை நியமித்துள்ளார். இவர் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு கூடுதல் நீதிபதியாகப் பணியாற்றுவார்.

19. மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் புதிய தலைவர் யார்?

**விடை:** பிரமோத் சந்திர மோடி

**விளக்கம்:**

1. இந்திய வருவாய்ப் பணி அதிகாரியான பிரமோத் சந்திர மோடி மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் (CBDT – Central Board of Direct Taxes) தலைவராகப் பொறுப்பேற்றார். CBDT என்பது வருமான வரித்துறையின் கொள்கைகளை உருவாக்கும் ஒரு அமைப்பாகும்.

20. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் முதல் ஊழல் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** ''டி.கே.ஜெயின்''

**விளக்கம்:**

1. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (BCCI) முதல் ஊழல் விசாரணை அதிகாரியாக உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ''டி.கே.ஜெயின்'' என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். BCCI –ன் தலைவராக தற்போது C.K.கண்ணா என்பவர் உள்ளார்.

21. ஐ.நா.விற்கான அமெரிக்க தூதராக சமீபத்தில் நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை**: "கெல்லி நைட் கிராப்ட்"

**விளக்கம்:**

1. ஐ.நா.விற்கான அமெரிக்க தூதராக "கெல்லி நைட் கிராப்ட்" (Knelly Knight Craft) என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

22. அமெரிக்காவிற்கான சவுதி அரேபியாவின் முதல் பெண் தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** ரீமா பிண்ட் பந்தர்

**விளக்கம்:**

1. சவுதி அரேபிய நாடானது, அமெரிக்காவின் முதல் பெண் தூதராக "ரீமா பிண்ட பந்தர்" (Reema bint Bandar)-ரை நியமித்துள்ளது.

23. கயானா குடியரசிற்கான இந்திய உயர் ஆணையராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** ஜே.ஜே.ஸ்ரீனிவாசா

**விளக்கம்:**

1. கயானா குடியரசு (Republic of Guyana) நாட்டிற்கான இந்திய உயர் ஆணையராக ஜே.ஜே. ஸ்ரீனிவாசா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1. கணினிகளில் விண்டோஸ் 7,8.1,10 இயக்க முறைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தி வரும் வைரஸ் எது?

**விடை:** ரம்பா

**விளக்கம்:**

1. கணினிகளில் "விண்டோஸ் 7,8.1,10" இயக்க முறைகளை இலக்கு வைத்து "ரம்பா" வைரஸ் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த வைரஸானது கணினிகளில் இலவசமாக தரையிறக்கம் செய்யப்படுகின்ற லிங்குகளின்(Link) ஊடாக கணினிக்கு நுழைவதாக அறியப்படுகின்றது.

2. இஸ்ரோவின், மனித விண்வெளி விமான மையம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

**விடை:** பெங்களூர்

**விளக்கம்:**

1. பெங்களூரிவில் புதிய ‘‘மனித விண்வெளி விமான மையத்தை’’ இஸ்ரோ அறிமுகம் செய்துள்ளது. இந்த மையம் இஸ்ரோவின் தலைமையகம் அருகில் அமைக்கப்பட்டுள்ளது. இஸ்ரோவின் முன்னாள் தலைவர் கே. கஸ்தூரிரங்கன் மற்றும் தற்போதைய இஸ்ரோ தலைவர் கே.சிவன் ஆகியோர் இந்த மையத்தை துவக்கி வைத்தனர். இந்த மையம் எஸ். உன்னிகிருஷ்ணன் நாயர் தலைமையில் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

3. இந்தியாவின் 40வது தகவல் தொடர்பு செயற்கைகோள் எந்த இராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது?

விடை: ஏரியன் - 5 (ஐரோப்பிய இராக்கெட்)

**விளக்கம்:**

1. இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO) உருவாக்கியுள்ள 40வது தகவல் தொடர்பு செயற்கை கோளான (GSAT – 31) ‘‘ஜிசாட் - 31’’ ஐரோப்பிய ராக்கெட்டான ‘‘ஏரியன் - 5’’ (Ariane – 5, VA247) மூலம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இந்த செயற்கைகோள் பிப்ரவரி 6ம் தேதி பிரெஞ்சு கயானாவிலிருந்து ஏவப்படுகிறது.

4. சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் கேரட்டிலிருந்து லேசர் கதிர்களை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?

**விடை:** சென்னை ஐ.ஐ.டி.

**விளக்கம்:**

1. சர்.சி.வி. ராமன் கண்டுபிடிப்பை அடிப்படையாகக் கொண்டு, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் கேரட்டிலிருந்து சீரான லேசர் கதிரை (Random Laser Ray), சென்னை ஐ.ஐ.டி (Chennai – IIT) ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். காய்கறியிலிருந்து லேசர் கதிர் உற்பத்தி செய்யப்படுவது உலகிலேயே இதுதான் முதல்முறை.

5. “NTA Students App” என்ற மொபைல் செயலியை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

**விடை:** தேசிய சோதனை நிறுவனம் (NTA)

**விளக்கம்:**

1. மாணவர்கள் தங்கள் கணினி அல்லது செல்பேசி மூலம் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளையும், மாதிரி தேர்வுகளையும் மேற்கொள்ளும் வகையில் தேசிய சோதனை நிறுவனம் (National Testing Agency), “NTA Students App” என்ற புதிய மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

6. இந்தியாவின் 40வது தகவல் தொடர்பு செயற்கை கோள் எது? அது எந்த இராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது?

**விடை:** ஜிசாட்-31, ஏரியன் 5விஏ-247

**விளக்கம்:**

1. இந்தியாவின் 40வது தகவல் தொடர்பு செயற்கை கோளான ‘‘ஜிசாட்-31’’ பிரஞ்சு கயானாவில் (தென் அமெரிக்கா) இராக்கெட் ஏவுதளத்திலிருந்து ‘‘ஏரியன் 5விஏ-247’’ என்ற இராக்கெட் மூலம் பிப்ரவரி 06, 2019 அன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த ஜிசாட்-31, செயற்கை கோள், விசாட் நெட்வொர்க், தொலைக்காட்சி இணைப்பு, டிஜிட்டல் செய்தி சேகரிப்பு செல்லிடப்பேசி சேவைகளை மேம்படுத்த உதவுகிறது.

7. நாசா, தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகத்தின் தகவலின்படி 2018ம் ஆண்டு எத்தகைய ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது?

**விடை:** 4வது வெப்பமான ஆண்டு

**விளக்கம்:**

1. நாசா, தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகத்தின் தகவலின்படி, 1880 ஆம் ஆண்டு முதல் 4வது வெப்பமான ஆண்டாக, 2018ம் ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. 2015, 2016, 2017 ஆகியவை இதற்கு முன்பிருந்த 3 வெப்பமான ஆண்டுகளாகும். 2018ம் ஆண்டில் உலக வெப்பநிலையானது 20ம் நூற்றாண்டின் சராசரி வெப்பநிலையை விட 1.42 டிகிரி பாரன்ஹீட் அதிகமாகும்.

8. ஆபர்சுனிட்டி ரோவர் எந்த ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது?

**விடை:** 2003

**விளக்கம்:**

1. செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வாழ்வதற்கான சூழ்நிலைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக நாசா 2003ம் ஆண்டு அனுப்பிய ஆபர்ச்சுனிட்டி ரோவர் முழுமையாக செயலிழந்து விட்டதாக நாசா தெரிவித்துள்ளது. கடந்த 7 மாதங்களுக்கு முன்பு செவ்வாய் கிரகத்தில் வீசிய புயலில் சிக்கிய அந்த விண்கலம் காணாமல் போனது. அந்த புயலில் வேகம் குறைந்து சராசரி நிலையை எட்டிய போது, ரோவர் விண்கலம் தென்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

9. ஈரான் தயாரித்துள்ள ஏவுகணைகளைத் தாங்கிச் செல்லும் நீர்மூழ்கிக் கப்பலின் பெயர் என்ன?

**விடை:** பதேஹ்

**விளக்கம்:**

1. ஏவுகணைகைளைத் தாங்கிச் செல்லும் - நீர்மூழ்கிக் கப்பலான “பதேஹ்” (பாரசீக மொழியில் - வெற்றிடம்) –ஐ ஈரான் உருவாக்கியுள்ளது. இந்த நீர்மூழ்கி கப்பலில் உள்ள ஏவுகணை மூலம் சுமார் 2000 கி.மீ வரையிலான இலக்குகளை துல்லியமாக தாக்க முடியும்.

10. ஜி.பி.எஸ் உதவியில்லாமல் நடமாடும் உலகின் முதல் ரோபோட் எது?

**விடை:** AntBot

**விளக்கம்:**

1. AntBot என்ற பெயரில் ஜி.பி.எஸ். உதவியில்லாமல் நடமாடும் உலகின் முதல் ரோபோட்டை, பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த CNRS (National Centre for Scientific Research) அமைப்பின் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

11. பிரபஞ்சத்தின் தோற்றம் குறித்த ஆய்விற்கான ஸ்பியரெஸ் (SPHEREx) என்ற திட்டத்தை தொடங்க உள்ள நிறுவனம் எது?

**விடை:** நாசா

**விளக்கம்:**

1. பிரபஞ்சத்தின் (Universe) தோற்றம் குறித்து புரிந்து கொள்வதற்காக ஒட்டுமொத்த வான்பரப்பையும் ஆய்வு செய்வதற்காக மிகவும் புகழ்பெற்ற திட்டமான ஸ்பியரெஸ் (SPHEREx) திட்டத்தை நாசா தொடங்க உள்ளது. இந்த திட்டமானது 2023ம் ஆண்டில் செயல்படுத்த உள்ளது.

12. இந்தியாவின் முதல் "Fulldome – 3D திரையரங்கம்" எங்கு தொடங்கப்பட்டது.

**விடை:** கொல்கத்தா (மேற்கு வங்காளம்)

**விளக்கம்:**

1. மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவில் உள்ள அறிவியல் நகரத்தில் "இந்தியாவின் முதல் Fulldome-3D திரையரங்கம்" (Fulldome 3D Digital Theatre) மத்திய கலாச்சார அமைச்சர் மகேஷ் சர்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

13. "QRSAM" என்பதன் விரிவாக்கம் என்ன?

**விடை:** Quick Reaction Surface to Air Missile

**விளக்கம்:**

1. முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதிவிரைவு ஏவுகணையான "QRSAM" (Quick Reaction Surface to Air Missile) என்ற தரையிலிருந்து வானில் உள்ள இலக்கை துல்லியமாக தாக்கி அளிக்கும் இரு ஏவுகணைகளை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெற்றிகரமாக ஒடிசாவின் சண்டிப்பூரில் சோதனை செய்யப்பட்டுள்ளது.

# விளையாட்டு நிகழ்வுகள்

1. ஐசிசி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் பேட்டிங் தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ள வீராங்கனை யார்?

**விடை:** ஸ்மிரிதி மந்தனா

**விளக்கம்:**

1. ஐசிசி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் பேட்டிங் தரவரிசையில் இந்தியாவின் ஸ்மிரிதி மந்தனா முதலிடம் பிடித்துள்ளார். ஆஸ்திரேலியாவின்



WeShine Academy

எல்லிஸ் பெர்ரி 2ம் இடமும், மேக் லேனிங் 3ம் இடமும் பிடித்துள்ளனர். நியூசிலாந்தின் எமி சாட்டர்வொயிட் 4ம் இடம் பிடித்துள்ளார். இந்தியாவின் மிதாலி ராஜ் 5ம் இடத்தில் உள்ளார்.

2. 200 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய முதல் கிரிக்கெட் வீராங்கனை யார்?

**விடை:** மிதாலி ராஜ்

**விளக்கம்:**

1. "அதிக ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள" மிதாலி ராஜ் நியூஸிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் களமிறங்கியதன் மூலம், "200 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய" முதல் வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

3. 2019 தாய்லாந்து ஓபன் டென்னீஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை:** டயனா யாஸ்ட்ரிம்ஸ்கா (Dayana Yastremska)

**விளக்கம்:**

1. 2019 தாய்லாந்து ஓபன் டென்னிஸ் (2019 Thailand Open Tennis) போட்டியின், மகளிர் ஒற்றையர் பிரிவில் உக்ரைன் வீராங்கனை, டயனா யாஸ்ட்ரிம்ஸ்கா (Dayana Yastremska) சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

4. 17வது ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற அணி எது?

**விடை:** கத்தார்

**விளக்கம்:**

1. ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற 17வது ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் கத்தார் அணியானது, முன்னாள் சாம்பியனான ஜப்பான் அணியை வீழ்த்தி முதன் முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. 2019 ஆசிய கோப்பை கால்பந்து தொடரில் மதிப்புமிக்க வீரராக "அல்மோஸ் அலி" (கத்தார்) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

5. 2019 – WTA டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற வீராங்கணை யார்?

**விடை:** கிக்கி பெர்ட்டன்ஸ் (நெதர்லாந்து)

**விளக்கம்:**

1. ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க நகரில் நடைபெற்ற 2019 – WTA (Women's Tennis Association) டென்னிஸ் போட்டியில் நெதர்லாந்து வீராங்கணை கிக்கி பெர்ட்டன்ஸ் (Kiki Bertens) சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

6. இகாட் கோப்பைக்கான சர்வதேச பளுதூக்கல் போட்டியின் 48 கிலோ எடைப் பிரிவில் தங்கம் வென்றவர் யார்?

**விடை:** மீராபாய் சானு

**விளக்கம்:**

1. தாய்லாந்தில் நடைபெற்ற இகாட் கோப்பைக்கான சர்வதேச பளுதூக்குதல் போட்டியில் மீராபாய் சானு (இந்தியா - மணிப்பூர்) 48 கிலோ எடைப் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

7. உலக குத்துச்சண்டை தரவரிசைப் பட்டியலில் Light fly பிரிவில் முதலிடம் பிடித்துள்ள இந்திய வீராங்கனை யார்?

**விடை:** மேரி கோம்

**விளக்கம்:**

1. சர்வதேச குத்துச்சண்டை சங்கம் வெளியிட்டுள்ள உலக குத்துச்சண்டை தரவரிசைப் பட்டியலில், 45 – 48 கி.கி., 'Light fly' பிரிவில், 1700 புள்ளிகள் பெற்று இந்திய குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் முதலிடம் பிடித்துள்ளார்.

8. சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி 2019ல் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை:** கோரென்டின் மவுட்டெட்

**விளக்கம்:**

1. சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி 2019ல் கோரென்டின் மவுட்டெட் (பிரான்ஸ்) சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

9. உலக டென்னிஸ் வீரர்களின் (ATP Ranking 2019) தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பிடித்த வீரர் யார்?

**விடை:** “ஜோகோவிச்” (செர்பியா)

**விளக்கம்:**

1. உலக டென்னிஸ் வீரர்களின் (ATP Ranking 2019) தரவரிசைப் பட்டியலை சர்வதேச டென்னிஸ் கழகம் வெளியிட்டுள்ளது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் “ஜோகோவிச்” (செர்பியா) முதலிடத்திலும் ரபெல் நடால்(ஸ்பெயின்) 2-ஆம் இடத்திலும் உள்ளனர். இந்திய வீரர் பிரஜ்னேஷ் குணேஸ்வரன் 97-வது இடத்தைப் பிடித்துள்ளார்.

10. எம்.ஆர்.எப் சாலஞ்ச் பட்டத்தை வென்ற முதல் பெண் யார்?

**விடை:** ஜாமி சாட்விக் (இங்கிலாந்து)

**விளக்கம்:**

1. எம்.ஆர்.எ.ஃ.ப் சாலஞ்ச் பட்டத்தை (MRF Challenge title) வென்ற முதல் பெண் ஓட்டுநர் எனும் பெருமையை இங்கிலாந்தின் ஜாமி சாட்விக் (Jamie Chadwick) பெற்றுள்ளார். சென்னையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், இவர் இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

11. எந்த அணி இராணி கோப்பையை வென்றுள்ளது?

**விடை:** விதர்பா அணி

**விளக்கம்:**

1. ரெஸ்ட் ஆ.ஃ.ப் இந்தியா அணிக்கு எதிரான இராணி கோப்பையை விதர்பா அணி வென்றுள்ளது.

12. தேசிய சீனியர் பாட்மின்டன் போட்டியில் (பெண்கள் ஒற்றையர் பிரிவு) சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றவர் யார்?

**விடை:** சாய்னா நேவால்

**விளக்கம்:**

1. கவுகாத்தியில் நடைபெற்ற 83வது ‘‘தேசிய சீனியர் பாட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டியின்’’ பெண்கள் ஒற்றையர் பிரிவில் ‘‘சாய்னா நேவால்’’ சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.

13. 83-வது தேசிய சீனியர் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சாம்பியன் பட்டத்தை வென்றவர் யார்?

**விடை:** சவுரப் வர்மா

**விளக்கம்:**

1. கவுகாத்தியில்(அசாம்) நடைபெற்ற 83-வது தேசிய சீனியர் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் (Badminton Senior National Championship – 2019), ஆண்கள் பிரிவில் "சவுரப் வர்மா(Sourabh Vermய)" சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

14. கத்தார் ஓபன் பெண்கள் சர்வதேச டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை:** எலிஸ் மெர்டென்ஸ் (பெல்ஜியம்)

**விளக்கம்:**

1. டோகா (கத்தார்) நகரில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டிற்கான கத்தார் ஓபன் பெண்கள் சர்வதேச டென்னீஸ் போட்டியில் "எலிஸ் மெர்டென்ஸ்" (பெல்ஜியம்) சிமோனா ஹாலெப்-யை (ருமேனியா) வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

15. லாரஸ் உலகின் சிறந்த விளையாட்டு வீரர் - 2019 என்ற விருது யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை:** நோவக் ஜோகோவிச்

**விளக்கம்:**

1. விளையாட்டுத் துறையில் சிறப்பாக சாதனை புரிந்தவர்களுக்கு வழங்கப்படும் "லாரஸ் உலகின் சிறந்த விளையாட்டு வீரர் - 2019" விருது (Laureus Sports Award) செர்பியாவின் நோவக் ஜோகோவிச் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. லாரஸ் உலகின் சிறந்த விளையாட்டு வீராங்கனை விருது ஜிம்னாஸ்டிக் வீராங்கனை "சைமன் பைல்ஸ்" என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

16. பல்கேரியா சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் மகளிர் 54 கிலோ எடைப்பிரிவில் தங்கம் வென்ற இந்திய வீராங்கனை யார்?

**விடை:** மீனா குமாரி

**விளக்கம்:**

1. பல்கேரியாவில் நடைபெற்ற ஸ்டெரன்ஜா சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் (Strandja Memorial Tournament) இந்தியாவின் நிகாத் ஸ்ரீன் (Nikhat Zareen) மகளிர் 51 கிலோ எடைப்பிரிவிலும், மீனா குமாரி **தேவி,** மகளிர் 54 கிலோ எடைப்பிரிவிலும் தங்கம் வென்றுள்ளனர். மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் மஞ்சுராணி வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

17. FIH வீரர்களுக்கான ஆண்டு விருது, எப்பொழுது தொடங்கப்பட்டது?

**விடை:** 1998ம் ஆண்டு

**விளக்கம்:**

1. சர்வதேச ஹாக்கிப் போட்டிகளில் சிறந்து விளையாடும் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர்களுக்கு சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் சார்பில் (International Hockey Federation – FIH) வருடாந்திர விருது வழங்கப்பட்டது.
2. FIH வீரர்களுக்கான ஆண்டு விருதானது 1998ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றது.
3. FIH இளம் வீரருக்கான ஆண்டு விருது 2001ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
4. 2019ம் ஆண்டின் சிறந்த ஆண் வீரர் - வன் டோரென் (பெல்ஜியம்). தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக இவர் இந்த விருதைப் பெறுகிறார்.
5. 2019ம் ஆண்டின் சிறந்த பெண் வீரர் - ஏவ டி கோடி (நெதர்லாந்து)

18. மூத்தோருக்கான 83-வது தேசிய பேட்மிண்டன், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றவர் யார்?

**விடை:** சவ்ரப் வெர்மா

**விளக்கம்:**

1. கௌஹாத்தியில் நடைபெற்ற 2019 யுனெக்ஸ் - சன்ரைஸின் மூத்தோருக்கான 83-வது தேசிய பேட்மிண்டன், (இறகுப் பந்து) ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டத்தை சவ்ரப் வர்மா வென்றுள்ளார்.

19. 19 வயதுக்குட்பட்டோர் யூத் டெஸ்ட் போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்ற அணி எது?

**விடை:** இந்தியா

**விளக்கம்:**

1. 19 வயதுக்குட்பட்டோர் யூத் டெஸ்ட் ஆட்டத்தில், இந்தியா மற்றும் தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான யூத் டெஸ்ட் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. இதில் 9 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி வென்றது.

# வர்த்தக நிகழ்வுகள்

1. வரிவிலக்கு அளிக்கப்படுவதற்கான, வருமானத்தின் உச்ச வரம்பு எவ்வளவு?

**விடை:** ரூ. 5 லட்சம்

**விளக்கம்:**

1. இடைக்கால மத்திய பட்ஜெட் - 2019ல் வரி விதிப்புக்குட்பட்ட தனிநபர் வருமானம் ரூ.5 லட்சத்திற்குள் இருந்தால் வரிவிலக்கு அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
2. இதற்கு முன் 2.5 லட்சமாக இருந்தது குறிப்பிடத்தக்கது

2. நடப்பு நிதி ஆண்டில் (2018-19) நாட்டின் நிதிப் பற்றாக்குறை, நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) எத்தனை சதவீதமாக இருக்கும்?

**விடை:** 3.3 %

**விளக்கம்:**

1. நடப்பு நிதி ஆண்டில் (2018-19) நாட்டின் நிதிப் பற்றாக்குறை, நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 3.3 சதவீத அளவுக்கு இருக்கும் என சுபாஷ் சந்திர கார்க் (பொருளாதார விவகாரத் துறைச் செயலர்) தெரிவித்துள்ளார். 2020ம் ஆண்டில் பற்றாக்குறை இலக்கு 3 சதவீதமாக குறைக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

3. கிஷான் சுவிதா கடன் வழங்கும் முதல் சிறு நிதியியல் வங்கி எது?

**விடை:** உஜ்ஜீவன் சிறு நிதியியல் வங்கி

**விளக்கம்:**

1. விவசாயத்திற்கும் அதுசார்ந்த நடவடிக்கைகளுக்கும் பயன்படும் வகையில் எவ்வித பிணையையும் இல்லாத, "கிசான் சுவிதா கடன்" என்ற திட்டத்தை உஜ்ஜீவன் சிறு நிதியியல் வங்கி (Ujjivan Small Finance Bank) தொடங்கியுள்ளது.

4. 2019ல் ரிசர்வ் வங்கியிடம் இருந்து வணிக வங்கி பெறும் கடன்களுக்கான வட்டி விகிதம் (Repo rate) என்ன?

**விடை:** 6.25%

**விளக்கம்:**

1. இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையில் முதலாவது நிதிக் கொள்கை குழு கூட்டம் மும்பையில் நடைபெற்றது. ரிசர்வ் வங்கியிடம் இருந்து வணிக வங்கிகள் பெறும் கடன்களுக்கான வட்டி (ரெப்போ ரேட்) – 6.5% இருந்து 6.25% - ஆக குறைத்துள்ளது. வணிக வங்கியிடமிருந்து ரிசர்வ் வங்கி பெறும் கடன்களுக்கான வட்டி (ரிவர்ஸ் ரெப்போ ரேட்) 6.25% இருந்து 6% - ஆக குறைத்துள்ளது

5. RBI 3.5 கோடி ரூபாய் அபராதம் விதித்த வங்கிகள் எது?

**விடை:** பாங்க் ஆப் இந்தியா, ஓரியன்டல் பாங்க் ஆப் காமர்ஸ், பஞ்சாப் நேஷனல் வங்கி

**விளக்கம்:**

1. இந்திய ரிசர்வ் வங்கி பிறப்பித்த உத்தரவுகளை (வங்கிகளில் பணம் கையாள்வது, வங்கிகளுக்கு இடையே தகவல் பரிமாற்றம் மற்றும் கணக்குகளை மறுகட்டமைப்பு செய்தல்) கடைப்பிடிக்காத, மூன்று தேசிய வங்கிகளுக்கு 3.5 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பாங்க் ஆப் இந்தியா - 1 கோடி ஓரியன்டல் பாங்க் ஆப் காமர்ஸ் - 1.5 கோடி பஞ்சாப் நேஷனல் வங்கி - 1 கோடி

6. தேசிய குறைந்தபட்ச ஊதியத்தை தீர்மானிக்கும் முறைகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?

**விடை:** டாக்டர். அனூப் சத்பதி

**விளக்கம்:**

1. "டாக்டர் அனூப் சத்பதி" (Dr. Anoop Satapathy) தலைமையிலான குழு "தேசிய குறைந்தபட்ச ஊதியத்தை தீர்மானிக்கும் முறைகள்" குறித்த அறிக்கை சமர்பித்துள்ளது.

2. அதன்படி, தேசிய குறைந்தபட்ச ஊதியமாக நாளொன்றுக்கு 375 அல்லது மாதத்திற்கு 9750 ரூபாய் என இக்குழு பரிந்துரைத்துள்ளது.

# முக்கிய தினங்கள்

1. தேசிய தியாகிகள் தினம் எந்த நாளில் கடைபிடிக்கப்படுகிறது?

**விடை:** ஜனவரி 30

**விளக்கம்:**

1. தேசிய தியாகிகள் தினம் (National Martyrs Day – 2019) மகாத்மா காந்தியின் சுதந்திர போராட்டத்தினை நினைவு கூறுவதற்காக, ஆண்டு தோறும் அவரது நினைவு நாளான ஜனவரி 30-யை தேசிய தியாகிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இது மகாத்மா காந்தியின் 71வது நினைவு தினமாகும்.

2. உலக புற்றுநோய் தினம் எந்த நாளில் கடைப்பிடிக்கப்படுகிறது?

**விடை:** பிப்ரவரி4

**விளக்கம்:**

1. உலக புற்றுநோய் தினம் - பிப்ரவரி 4 புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 4ம் தேதி அன்று உலக புற்றுநோய் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான (2019) உலக புற்றுநோய் தின மையக்கருத்து – I Am and I Will

3. உலக ஈர நிலங்கள் தினம் எந்த நாளில் கடைபிடிக்கப்படுகிறது?

**விடை:** பிப்ரவரி – 2

**விளக்கம்:**

1. உலக ஈர நிலங்கள் தினம் - பிப்ரவரி 2 (World Wetlands Day) யுனெஸ்கோ அமைப்பானது, ஈர நிலங்களின் பயன்பாடு குறித்து அறிவதற்காக பிப்ரவரி 2ம் நாளை ஈர நில நாள் என அறிவித்துள்ளது. 2019 மையக்கருத்து : ‘‘ஈரநிலங்கள் மற்றும் காலநிலை மாற்றம்’’ (Wetlands and Climate Change) ஈர நிலங்கள் சுனாமி அலைகளை தடுக்கவும், கடல் நீர் உட்புகாமல் தடுக்கவும், பல்லுயிர் பெருக்கத்திற்காகவும் பயன்படுகிறது.

4. 2019ஆம் ஆண்டின் உலக ரேடியோ தின மையக்கருத்து என்ன?

**விடை:** உரையாடல், சகிப்புத்தன்மை மற்றும் அமைதி

**விளக்கம்:**

1. உலக வானொலி தினம் (World Radio Day) – பிப்ரவரி 13 ஐக்கிய நாடுகள் சபையானது 2013-ஆம் ஆண்டில் பிப்ரவரி 13-ஆம் தேதியை உலக ரேடியோ தினமாக அறிவித்தது. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் உலக ரேடியோ தினம் பிப்ரவரி 13 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. 2019 மையக்கருத்து : உரையாடல், சகிப்புத்தன்மை மற்றும் அமைதி (Dialogue, Tolerance and Peace) என்பதாகும்.

5. அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் எந்த நாளில் கடைபிடிக்கப்படுகிறது?

**விடை:** பிப்ரவரி 11

**விளக்கம்:**

1. அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 11 (International Day of women and Girls in Science) அறிவியல் மற்றும் ஆராய்ச்சிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகள் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 11ம் தேதியை அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இத்தினத்தின் இந்த ஆண்டின் (2019) கருத்துரு:- ''உள்ளடங்கிய பசுமையான வளர்ச்சியுடன் அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் வளர்ச்சிக்காக முதலீடு செய்தல்'' என்பதாகும். (Investment in women and Girls in Science for Inclusive Green Growth)

6. உலக சமூக நீதி தினம் எந்த நாளில் கடைபிடிக்கப்படுகிறது?

**விடை:** பிப்ரவரி 20

**விளக்கம்:**

1. உலக சமூக நீதி தினம் - பிப்ரவரி 20 (World Day of Social Justice)
2. ஐக்கிய நாடுகளின் அமைப்பு, ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 20ம் தேதி உலக சமூக நீதி தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இத்தினமானது முதன் முதலில் 2009ல் கடைபிடிக்கப்பட்டது.

3. 2019ம் ஆண்டின் உலக சமூக நீதி தின மையக்கருத்து: ‘நீங்கள் அமைதி மற்றும் மேம்பாட்டை விரும்பினால், சமூக நீதிக்கான வேலை பாருங்கள்’ (If you want peace and Development, work for Social Justice) என்பதாகும்.

7. சர்வதேச தாய்மொழி தினம் எந்த நாளில் கொண்டாடப்படுகிறது?

**விடை:** பிப்ரவரி 21

**விளக்கம்:**

1. சர்வதேச தாய்மொழி தினம் - பிப்ரவரி 21 (International Mother Language Day – 2019) மொழியியல் பன்முகத்தன்மை மற்றும் பன்மொழி கல்வி ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21ல் சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. 2019ம் கருத்துரு:- “உள்நாட்டு மொழிகளின் வளர்ச்சி, அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படை” என்பதாகும். (Indigenous Languages Matter for development, Peace building and reconciliation)

8. உலக சிந்தனை தினம் எந்த நாளில் கடைபிடிக்கப்படுகிறது?

**விடை:** பிப்ரவரி 22

**விளக்கம்:**

1. உலக சிந்தனை தினம் (World Thinking Day) – பிப்ரவரி 22 உலகெங்கிலும் உள்ள பெண் வழிகாட்டிகள் மற்றும் பெண் காரணங்களை அடையாளப்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 22 அன்று உலக சிந்தனை தினம் கொண்டாடப்படுகிறது. 2019 ஆம் ஆண்டின் உலக சிந்தனை தினத்தின் கருத்துரு: தலைமைத்துவம் (Leadership) என்பதாகும்.

## புத்தகங்கள்

1. “லா வி டி’உன் ஹோம் இன்கோன்னு” (La vie d’un homme inconnu) என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

**விடை:** ஆண்ட்ரி மேகின் (Andrei Makine’s)

**விளக்கம்:**

1. ஆண்ட்ரி மேகின் என்பவர் எழுதிய லா வி டி’வின் ஹோம் இன்கோன்னு (Andrei Makine’s “La Vie d’un homme inconnu” – தெரியாத மனிதனின் வாழ்க்கை) எனும் புத்தகத்தின் மொழி பெயர்ப்பானது இலக்கிய மொழிபெயர்ப்பிற்கான “ரோமைன் ரோலண்ட் புத்தக பரிசினை” வென்றுள்ளது.
2. இந்த புத்தகமானது S.R. கிச்சன மூர்த்தியால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

2. “Let’s talk On Air : Conversation with Radio Presenters” என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

**விடை:** ராகேஷ் ஆனந்த் பக்ஷி

**விளக்கம்:**

1. ராகேஷ் ஆனந்த் பக்ஷி (Rakesh Anand Bakshi) என்பவர் எழுதிய, “Let’s talk On Air : Conversation with Radio Presenters” என்ற புத்தகம் உலக வானொலி தினமான (World Radio Day) பிப்ரவரி 13ல் (இன்று) வெளியிடப்படுகிறது.

3. “Law, Justice and Judicial Power – Justice P.N. Bhagwati’s Approach’ என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

**விடை:** மூல் சந்த் சர்மா

**விளக்கம்:**

1. “சட்டம், நீதி மற்றும் நீதித்துறை அதிகாரம் - நீதிபதி P.N. பகவதியின் அணுகுமுறை (Law, Justice and Judicial Power – Justice P.N. Bhagwati’s Approach) என்ற புத்தகத்தை பேராசிரியர் “மூல் சந்த் சர்மா” (Mool Chand Sharma) எழுதி அண்மையில் வெளியிடப்பட்டது.

4. 1919 ல் ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றிய கவிதை “KHOONI VAISAKHI” – யை எழுதியவர் யார்?

**விடை:** நானக் சிங்

**விளக்கம்:**

1. நானக் சிங் (Nanak Singh) எழுதிய “Khooni vaisakhi” தற்போது ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த கவிதை (1919ல் நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலை) 1920ல் ஆங்கில அரசால் தடைசெய்யப்பட்டிருந்தது

5. ‘‘தரம், அங்கீகாரம் மற்றும் தரவரிசை - இந்திய உயர்கல்வி வழங்குவதில் ஒரு அமைதி புரட்சி’’ என்ற புத்தகத்தை பதிப்பித்தவர் யார்?

**விடை:** டாக்டர் H. சதுர்வேதி

**விளக்கம்:**

1. ‘‘தரம், அங்கீகாரம் மற்றும் தரவரிசை - இந்திய உயர்கல்வி வழங்குவதில் ஒரு அமைதி புரட்சி’’ (Quality, Accreditation, and Ranking – A silent Revolution in the offing in Indian Higher Education) என்ற புத்தகம் டாக்டர். H. சதுர்வேதி என்பவரால் பதிப்பித்து குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடுவால் வெளியிடப்பட்டது.